# வேளாண் வணிகம்

உழவர்களின் நண்பன் – கையடக்க தகவல் களஞ்சியம்

வழி: 001 | துணை 005 | ஜூன் 21, 2026–சென்னை–600 073

சென்னையிலிருந்து நாடு முழுதும் தொடர்பில் இருக்கும் துணைவன் | மாதம் இருமுறை வெளிவரும் மின் இதழ்




## ஸ்டீவியா கேக்

மூலிகை கேக் தயாரிப்பது எப்படி

## விதை உற்பத்தி மற்றும் விதை விற்பனையில் சாத்தி

உள்ளே ...

வேளாண் வணிகம் ஆசிரியர் குழு

ஆசிரியர்
**வேளிர். இராம. சுப்பிரமணியன்**
*முதறிவியல் (வேளாண்மை), முதுகலை (அரசியல்), இதழியல் (சான்று )*

புகைப்படம் | வடிவமைப்பாளர்
**அ.ச.ஜோ. அலாய்சியஸ்**
*முதுகலை (பொருளியல்), முதுகலை (இதழியல்), காட்சி தொடர்பு (முதுகலை பட்டயம்)*

துணை செய்தி ஆசிரியர்
**பா.ராஜாமுருகுசெழியன்,**
*துணை செய்தி ஆசிரியர், (ஓய்வு), தினமணி ஆசிரியர் முதறிவியல் (வேளாண்மை), முதுகலை (அரசியல்), இதழியல் (சான்று)*

வெளியீட்டாளர்
**இரா.மாணிக்கவாசகம்**
*இளங்கலை (வணிகவியல்)*

**விளம்பரம் /செய்தித் தொடர்புக்கு அனுகவும் : 8056305483**
**ஆராய்ச்சி மாணவர்களின் கட்டுரைகளும் வரவேற்கப்படுகின்றன.**

# ஆசிரியர் பக்கம்

வேளாண் வணிக வாசக நேயர்களுக்கு வணக்கம்.

மின்னிதழ் படித்த பலரும் பாராட்டி வரும் வேளையில் விமர்சனங்களும் வருகின்றன. ஒரு நேயர் சார் இது AI உலகம், பக்கம் பக்கமா எழுதினா யாரும் படிக்க மாட்டார்கள்.....சொல்ல வேண்டியதை சுருக்கமாக "வரிச் செய்திகளாய்" சொல்லுங்கள் .... என்கிறார் அதுவும் சரிதான்

இதுவரை பெய்த மழை ...? விவசாயத்திற்கு உகந்ததாக தெரியவில்லை!... இனியாவது வானிலை யாளர்கள் கொஞ்சம் சரியாக கணித்துச் சொல்லுங்க... சாமி! வாங்க / விற்க பகுதியில் மிகச் சில செய்திகளே வந்தாலும்... நிறைய கேட்புகள்... பலர் இருப்பை விற்று விட்ட செய்தி மகிழ்வைத் தருகிறது.

சிறிய துரும்பானாலும் வேளாண் வணிகத்தின் நோக்கம் நிறைவேறி வருகிறது.

இயற்கை வேளாண்மை செய்வதும் சந்தைப் படுத்தலும் ஒரு தற்சார்பு மற்றும் சமுதாய சேவையாக மட்டுமே பார்க்க முடிகிறது. இதில் கூடுதல் விலைக்கு பலர் விற்க முயல்வதும், நுகர்வோர் 'சான்று' கேட்டால் இல்லை என்பதும் அங்காங்கே நடந்தேறி வருகிறது.

மானாவாரி வேளாண்மை என்பது பெரிய கேள்விக்குறியாகி விட்ட நிலையில் 'டெல்டா' பகுதியில் உறுதியாக பயிர் செய்ய முடியுமா? என்று தெரியாத நிலையில் நம் விவசாயிகளின் நிலை எப்படி இருக்குமோ?

வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் விற்பனை போன்ற துறைகளில் பயன் படுத்தப்படாமல் ஏன்? இது யாருடைய சொத்து என்று தெரியாமலே பல ஆயிரம் கோடி மதிப்புள்ள அசையும் – அசையா சொத்துகள் அசைவின்றி கிடக்கின்றன. அவைகளை முறைப் படுத்தி அரசுக்கு வருமானமாக கொண்டு விவசாயி களுக்கு நிரந்தரமாக (கட்டிடம் அல்லாத) பயனடையும் திட்டங்களை நிறை வேற்றலாமே! பூனைக்கு யார் மணி கட்டுவது?

விவசாய சங்கங்கள் பலர் போராடி வந்தாலும் தனி நபர் லாபம் கருதி ஒரு சிலர் சங்கம் என்ற போர்வையில் 'சால்ரா'– தட்டி வருகிறார்கள்.

அரசே இடுபொருள் வாங்கி, (டெண்டர்) மாற்ற வேண்டும் மானியம் என்ற பெயரில் விற்பனை செய்வதை தவிர்த்தல் நலம்! இப்போதே பல பழம் பெருச்சாலிகள் தலைமைச் செயலகத்தைச் சுற்றி வருவதாக செய்தி....

வாரீர்!!!

அன்புடன் தங்கள் ஆதரவுடனும்
பங்கேற்புடனும்..!

ஆசிரியர் **அக்ரி. ஆர்.எம். சுப்ரமணியன்.**

# விதைப் பரிசோதனை செய்வீர்! விளைச்சலை அதிகரிப்பீர்!

விருதுநகர் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியரின் அலுவலக வளாகத்தில் விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு துறையின் கீழ் விதைப் பரிசோதனை நிலையம் இயங்கி வருகிறது. இவ்வாய்வகத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் விதைகளின் தரங்களான சுத்தத்தன்மை, முளைப்புத்திறன், ஈரப்பதம், பிற இரக கலவன்கள் போன்ற விதைத் தரத்தை ஆய்வு செய்து, ஆய்வறிக்கை வழங்கப்படுகிறது. நம் விருதுநகர் மாவட்டத்தில் மக்காச்சோளம், நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள், காய்கறி பயிர்கள், எள், பருத்தி மற்றும் கடலை ஆகியன பிரதான பயிர்களாக சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. தரமான விதைகளைப் பயன்படுத்தும் போது அதிக மகசூல் பெற முடியும். நெல், மக்காச்சோளம் போன்ற தானியங்களுக்கு 80 முதல் 90 சதவீதமும், பயறு வகைகளுக்கு 75 சதவீதமும், ரகப்பருத்திக்கு 65 சதவீதமும், வீரிய ஒட்டு பருத்திக்கு 75 சதவீதமும், எள்ளுக்கு 80 சதவீதமும் மற்றும் கடலைக்கு 70 சதவீதமும் முளைப்புத்திறன் இருக்க வேண்டும்.

மேலும் அனைத்து விதைகளிலும் குறைந்தபட்சம் 97-98 சதவீத சுத்தத் தன்மை இருக்க வேண்டும். விதையின் ஈரப்பதம் நெல், மக்காச்சோளம் போன்ற தானிய வகைகளுக்கு முறையே 13,12 சதவீதமும் பயறு மற்றும் கடலை வகை விதைகளுக்கு 9 சதவீதமும் இருத்தல் வேண்டும். சான்று பெறப்பட்ட தரமான விதைகளை பயன்படுத்தி அதிக மகசூல் பெறலாம்.



மேலும், விதைப் பரிசோதனை நிலையத்தில் ரூ.80/- கட்டணம் செலுத்தி பரிசோதனை செய்து பயன்பெறலாம் என விதைப் பரிசோதனை அலுவலர்

திருமதி.சி.சிவகாமி, வேளாண்மை அலுவலர்கள் திருமதி.ஜானகி மற்றும் திருமதி.சாய்லட்சுமி சரண்யா ஆகியோர் தெரிவித்துள்ளனர். மேலும் விபரங்களுக்கு 9486858066 என்ற மொபைல் எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

# Rithvik Pipe

BIS
IS 4985 : 2021 CML-6400119610
IS 9537 CML-6400121694



DON'T JUST BUY A PIPE, BUY PEACE OF MIND ALONG WITH IT.

**25 YEARS WARRANTY**
A Symbol of Trust

**67 GRADE RAW MATERIALS**
Superior Strength, Long Life

**100% LEAD-FREE**
Healthy Water, Healthy Life

**TEST CERTIFICATE - QR CODE**
Download directly from every pipe

**CERTIFIED PIPES**
The True Mark of Quality

**FREE ON-SITE TESTING**
Post-sale quality verified right in front of your eyes

**EXCLUSIVE PIPE MANUFACTURER**
The ultimate symbol of quality

**ACCURATE WEIGHT & THICKNESS**
An Authentic Product (No Compromise)

## PRODUCT RANGES

- ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes)
- ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80)
- ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy)
- ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG)
- ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / ISI PVC FITTINGS
ISI LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

For Dealership & Projects Enquiries - 75618 22223, 75618 22224, 96458 77725

# மூலிகை கேக் தயாரிப்பது எப்படி

ஸ்டீவியா (Stevia rebaudiana Bertoni) என்பது சூரியகாந்தி குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பல்லாண்டு கால மூலிகையான ஸ்டீவியா ரெபாடியானா தாவரத்தின் இலைகளிலிருந்து பெறப்படும் ஒரு இயற்கையான, கலோரி இல்லாத இனிப்பூட்டியாகும். ஸ்டீவியா பல நூற்றாண்டுகளாக ஒரு இயற்கை இனிப்பூட்டியாகவும் பாரம்பரிய மருத்து வத்திலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஸ்டீவியா இலைகள் உலகின் பல்வேறு பகுதிகளில் நீரிழிவு நோய்க்கு சிகிச்சையளிக்கப் பொதுவாகப் பயன் படுத்தப்படுகின்றன. பல நாடு களில், ஸ்டீவியா உணவுகள், பானங்கள் மற்றும் மருந்துகளில் சர்க்கரைக்கு மாற்றாகப் பரவலாகப் பயன்படுத் தப்படுகிறது. இந்த இனிப்புக்கு காரணம் அதில் உள்ள ஸ்டீவியோல் கிளை கோசைடுகள் ஆகும், இது சுக்ரோஸை விட 100–300 மடங்கு அதிக இனிப்புத்தன்மையைக் கொண்டுள்ளது.

பேக்கரி என்பது ஒரு பாரம்பரிய தயாரிப்பு மற்றும் உணவு பதப்படுத்தும் துறையில் ஒரு முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. பேக்கரி பொருட்கள் அனைத்து தரப்பு மக்களிடையேயும் ஒரு பொதுவான நுகர்வுப் பொருளாக மாறியுள்ளன. இந்தியாவில் பேக்கரி பிரிவை ரொட்டி, பிஸ்கட் மற்றும் கேக்குகள் என மூன்று பரந்த பிரிவுகளாக வகைப்படுத்தலாம்.

கேக்குகள் என்பவை, கோதுமை மாவு அடிப்படையிலான மாவுக்கலவையை அடர்த்தியான வடிவத்தில் சுடுவதன் மூலம் தயாரிக்கப்படும், இனிப்பான, ஓரளவு ஈரப்பதமான உணவுப் பொருளாகும்.



<u>தேவையான பொருட்கள்:</u>

- கோதுமை மாவு – 500 கிராம்
- ஸ்டீவியா இலைச் சாறு – 25 மிலி
- உப்பு சேர்க்காத வெண்ணெய் – 200கிராம்
- முட்டைகள் – 10 எண்ணிக்கை
- பேக்கிங் பவுடர் – 10 கிராம்
- பேக்கிங் சோடா – 10 கிராம்
- வெண்ணிலா எக்ஸ்ட்ராக்ட் – 10 மிலி

## ஸ்டீவியா இலைச் சாறு தயாரித்தல்

ஸ்டீவியா இலைகள் பன்னிரண்டு மணிநேரம் சுடுநீரில் ஊறவைக்கப்பட்டு, அதனை வடிகட்டிப் பிரித்தெடுக்க வேண்டும். பின்னர், அந்தத் திரவத்தை சூடுபடுத்தி அடர்த்தியான திரவத்தைப் பெற வேண்டும்.

## கேக் தயாரித்தல்

➢ முதலில் ஓவனை 180°C வெப்ப நிலையில் 10–15 நிமிடங்கள் முன்கூட்டியே சூடாக்கவும்.

அடுத்து, கோதுமை மாவை பேக்கிங் பவுடர் மற்றும் பேக்கிங் சோடாவுடன் சலிக்கவும்.

- முட்டையின் மஞ்சள் கரு மற்றும் வெள்ளைக் கருவைப் பிரிக்கவும். முட்டையின்மஞ்சள் கருவை அடித்து, அதனுடன் இளகிய வெண்ணெயைச் சேர்க்கவும். அது ஒரு மென்மையான பசை போல ஆகும் வரை அடிக்கவும். அது மென்மையாக ஆனதும், ஸ்டீவியா இலைச் சாறு மற்றும் வெண்ணிலா எசென்ஸ் சேர்த்து மீண்டும் அடிக்கவும். சலித்த மாவை இரண்டு பகுதிகளாக சேர்க்கவும், ஒவ்வொரு முறை சேர்த்த பிறகும் அடிக்கவும்.

- முட்டையின் வெள்ளைக் கருவை மென்மையான நுரை உருவாகும் வரை அடிக்கவும், அந்த நுரைத்த வெள்ளைக் கருவை மாவுடன் இரண்டு மூன்று பகுதிகளாகப் பிரித்து மெதுவாக சேர்க்கவும்.

- பேக்கிங் பாத்திரத்தில் நெய் தடவி, பேக்கிங் பேப்பரை விரிக்கவும். தயாரிக்கப்பட்ட அச்சுகளில் மாவை ஊற்றவும். முன் சூடாக்கப்பட்ட பேக்கிங் அடுப்பில் 40–45 நிமிடங்கள் பேக் செய்யவும்.

டாக்டர். தே. ரேவதி,
உதவி பேராசிரியர்,
தந்தை ரோவர் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஊரக வளர்ச்சி நிறுவனம், பெரம்பலூர்.





# Rithvik Pipe

IS 4985 : 2021 — CML-6400119610
IS 9537 — CML-6400121694
BIS



## DON'T JUST BUY A PIPE, BUY PEACE OF MIND ALONG WITH IT.

- **25 YEARS WARRANTY** — A Symbol of Trust
- **67 GRADE RAW MATERIALS** — Superior Strength, Long Life
- **100% LEAD-FREE** — Healthy Water, Healthy Life
- **TEST CERTIFICATE - QR CODE** — Download directly from every pipe
- **ISI CERTIFIED PIPES** — The True Mark of Quality
- **FREE ON-SITE TESTING** — Post-sale quality verified right in front of your eyes
- **ISI EXCLUSIVE PIPE MANUFACTURER** — The ultimate symbol of quality
- **ACCURATE WEIGHT & THICKNESS** — An Authentic Product (No Compromise)

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / ISI PVC FITTINGS**
**ISI LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

For Dealership & Projects Enquiries - 75618 22223, 75618 22224, 96458 77725

# சிறுதானியங்களின் மகத்துவங்கள்



சிறுதானிய உணவின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் ஐக்கிய நாடுகள் சபை 2023 ஆம் ஆண்டை சர்வதேச சிறுதானிய ஆண்டாக அறிவித்தது. அரிசி, கோதுமை, பார்லி போன்ற தானியங்களுடன் ஒப்பிடும்போது சிறுதானியங்கள் அதிக சக்தியைத் தரக்கூடியவை. இவற்றில், அதிக அளவில் நார்ச்சத்தும், கால்சியம், இரும்பு, புரதச்சத்து மற்றும் வைட்டமின்கள் உள்ளன. மற்ற தானியங்களுடன் ஒப்பிடும்போது இவற்றில் பைடிக் அமிலம் குறைந்து காணப்படுகிறது. இவற்றை அதிக அளவு உள்கொள்வதால், உடல் பருமன், சர்க்கரை நோய் மற்றும் ரத்தக் கொதிப்பு போன்ற நோய்கள் வராமல் பாதுகாத்துக் கொள்ளலாம். சிறுதானியங்கள் இயற்கை நமக்கு அளித்த சத்தான உணவாகும். அரிசி, கோதுமைக்கு மாற்றாக எதைச் சாப்பிடலாம் என்ற தேடலில் சர்வதேச அளவில் இன்று முன் நிற்பவை சிறுதானியங்கள்தாம்.

சிறுதானியங்களில் கேழ்வரகு, சாமை, தினை, பனிவரகு, வரகு மற்றும் குதிரை வாலி போன்றவை பெருமளவு வறண்ட நிலப்பகுதிகளிலும், மலைப்பகுதிகளிலும் மற்றும் மானாவாரியாகவும் அதிக அளவு பயிரிடப்பட்டு வந்தன. எனவே, இவை நீர்வளம் இல்லாத பகுதிகளான புன்செய் நிலங்களில் அதிக அளவு சாகுபடி செய்யப்படுவதால், புன்செய் நிலப்பயிர்கள் எனவும் அழைக்கப்படுகின்றன.

## கேழ்வரகு :

ஏழை முதல் பணக்காரர்கள் வரை அனைவருக்கும் ஊட்டமளிக்கக்கூடிய சத்து மிகுந்த மலிவான உணவாகும். கேழ்வரகில் புரதம், தாது உப்பு, சுண்ணாம்புச்

சத்து, இரும்புச் சத்து மற்றும் முக்கிய உயிர்ச்சத்துகளும் உள்ளன. கேழ்வரகில் மிகவும் அதிகப்படியான சுண்ணாம்புச் சத்து காணப்படுவதால், (100 கிராமில் ஏறத்தாழ 344 மில்லி கிராம் உள்ளது). எலும்பு தேய்மானத்தைக் குறைந்து எலும்புகளை உறுதி செய்யும். சிறு வயதிலிருந்தே இவ் வகையான உணவுகளை உண்ணும்போது மூட்டு வலி, மூட்டு வீக்கம் போன்ற எலும்பு சார்ந்த நோய்கள் வருவதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு. கேழ்வரகு உடல் உஷ்ணத்தை சம நிலையில் வைத்திருக்க உதவும். குடலுக்கு வலிமையையும் தரும். இதிலுள்ள டிரிப்டோபேன் (Tryptophan) என்னும் அமினோ அமிலம் பசி உணர்வைக் குறைத்து, உடல் எடையை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும்.

## சாமை :

அசதியையும் தளர்ச்சியையும் நீக்குவதற்கு ஏற்ற சரிவிகித உணவு சாமை ஆகும். சர்க்கரை நோயாளிகள் அதிகம் உள்ள நாடாக இந்தியா கருதப்படுகிறது. சர்க்கரை நோயைக் கட்டுப்பாட்டில் கொண்டு வர முக்கியத் தேவை நார்ச்சத்து, நெல்லரிசியைக் காட்டிலும் ஏழு மடங்கு நார்ச்சத்து கொண்ட தானியம் சாமை. சர்க்கரை நோயாளிகளுக்கு உகந்தது. இதனை



உணவாக உட்கொள்ளும்போது நீரிழிவு நோய் கட்டுப்படுத்தப்படுகிறது. ரத்தத்தில் சர்க்கரை அளவு அதிகமாகாமல் தடுக்கக்கூடிய ஒரு சிறந்த தானியம் சாமையாகும். ரத்தச் சோகையைக் குணப்படுத்தும். உடலில் கொழுப்புப் படிவதைத் தடுக்கும். இது மட்டுமல்லாமல், வயிற்றுக் கோளாறுகளுக்கும் சாமை அரிசி நல்லதொரு மருந்தாகவும் திகழ்கிறது.

## தினை :

தேனும் தினையும் தெவிட்டாத பண்டம் என்பது நம் முன்னோர்கள் கருத்து.



இத்தகைய சிறப்பு மிக்க தினையில் புரதச்சத்து மருந்து காணப்படுகிறது. 100 கிராம் தினையில் புரதச்சத்து 12.3 கிராம் மற்றும் 3.3 மில்லி கிராம் தாது உப்புகளும் உள்ளன. நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். இரத்தத்தில் உள்ள சர்க்கரை மற்றும் கொழுப்பின் அளவைக் கட்டுப்படுத்தும்.

## வரகு :

சிறுதானியங்களில் வரகு அதிக வறட்சியைத் தாங்கி வளரக் கூடியது. வரகரிசியில் புரதம், இரும்பு மற்றும் சுண்ணாம்புச் சத்துகள் உள்ளன. வரகு உடல் கனத்தைக் குறைக்கக் கூடியது. மார்பு வலியைப் போக்கும் தன்மை

கொண்டது. கோடை காலங்களில் வரகரிசி உணவுகளை அதிகம்




சாப்பிடுவதால், தாகம் தணிவதோடு, சிறுநீரகங்களில் கற்கள் ஏற்படுவதைத் தடுக்கும். சிறுநீரகங்களின் செயல்பாடுகளை மேம்படுத்தும்.

## பனிவரகு :



சிறுதானியங்களிலேயே மிகவும் குறைந்த நாள்களில் (65 முதல் 75 நாள்களில்) விளைச்சலைத் தரக்கூடிய பயிர் பனிவரகாகும். பனி வரகு பனியின் ஈரத்திலேயே விளையக் கூடியது என்று பொருள்படவே இப் பயிருக்கு பனிவரகு என்று பெயர் இடப்பட்டிருக்கிறது. குறைந்த தண்ணீர் நிறைந்த விளைச்சலையும் லாபத்தையும் தரக்கூடிய ஒரே பயிர் சிறுதானியங்கள் மட்டுமே. பனிவரகில் சோளம், கம்பு, அரிசியை விட கூடுதலான புரதச்சத் துள்ளது.

## குதிரைவாலி :




இதன் கதிர்கள் குதிரையின் வால் போன்று காட்சியளிப்பதால், இது குதிரைவாலி எனப் பெயர் பெற்றது. சிறுதானியங்களிலேயே அதிகப்படியான இரும்புச்சத்தும், நார்ச்சத்தும், தாது உப்புகளும் குதிரைவாலி அரிசியில் உள்ளது. உதாரணமாக, 100 கிராம் குதிரைவாலி அரிசியில் 15.2 மில்லி கிராம் இரும்புச் சத்தும், 10.1 மில்லி கிராம் நார்ச்சத்தும் மற்றும் 4.4 மில்லி கிராம் தாது உப்புகளும் உள்ளன. சர்க்கரை நோய்க்கு ஏற்ற உணவு குதிரைவாலி. இதய நோய்கள் வராமல் பாதுகாக்கும். நார்ச்சத்து நிறைவாக உள்ளதால், செரிமான மண்டலத்தைச் சீராக்கும் மற்றும் மலச்சிக்கலைத் தடுக்கும்.



## சிறுதானியங்களில் உள்ள மருத்துவப் பயன்கள் :

உடல் பருமன் கொண்டவர்கள் சிறுதானியங்களைப் பயன்படுத்தும் போது உடல் எடை சீராகக் குறைகிறது

சிறுதானியப் பயன்பாட்டில் பெண்களுக்கு பித்தப்பையில் கற்கள் வருவது தடுக்கப்படுகிறது.

குழந்தைகளுக்கு ஊட்டச்சத்துக் குறைவினால் ஏற்படும் நோய்கள் வராமலிருக்க உதவுகிறது.

ரத்த அழுத்தத்தை சீராக்கி, இதய நோய்களிலிருந்து பாதுகாப்பளிக்கிறது.

ரத்தத்தில் சர்க்கரையின் அளவை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க உதவுகிறது.

சிறுதானியங்களில் உள்ள மாங்கனீஸ் என்ற தாது உப்பு ஆஸ்துமா, ரத்த அழுத்தம் மற்றும் மாரடைப்பு வராமல் தடுப்பதற்கு ஏற்றதாகும்.

சிறுதானியங்களில் உள்ள பாஸ்பரஸ் எலும்பு வளர்ச்சிக்கு நல்லது.

சிறுதானியங்களில் உள்ள நார்ச்சத்து புற்றுநோய் வராமல் தடுக்க உதவுகிறது.

சிறுதானியங்களில் மக்னீசியம் அதிக அளவில் காணப்படுகிறது. இது ஆஸ்துமா குறைபாட்டையும் ஒற்றைத் தலைவலியையும் தடுக்கிறது.

நயாசின் (வைட்டமின் பி-3) அதிக அளவு கொழுப்பு சேருவதைக் குறைக்கிறது.

அன்றாடம் சிறுதானியங்களைப் பயன் படுத்துவோருக்கு இரண்டாம் வகை (type 2) அதாவது இன்சுலின் சார்ந்த சர்க்கரை நோய் வருவதில்லை.

திருமதி சி.சிங்காரலீனா பி.எஸ்சி.,(விவ.), எம்.பி.ஏ.,
விதை ஆய்வு துணை இயக்குநர், மதுரை.

முனைவர் மு.சத்தியா,
விதை ஆய்வாளர், உத்தமபாளையம்.




# விதை உற்பத்தி மற்றும் விதை விற்பனையில் சாத்தி

**ச. கண்ணன்** விதை சான்று அலுவலர்
**திருமதி சே.விஜயா** விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்புஉதவி இயக்குநர், மயிலாடுதுறை

இந்தியாவின் வேளாண் துறை டிஜிட்டல் மயமாக்கலை நோக்கி வேகமாக நகர்ந்து வருகிறது, மேலும் அந்தப் பயணத்தில் SATHI இணையதளம் ஒரு அடித்தளப் படியாகும். டிஜிட்டல் மாற்றம் விவசாயத்தை மறுவடிவமைத்து வரும் இந்தக் காலகட்டத்தில், இந்திய அரசு, விதை களின் தடமறிதல், அங்கீகாரம் மற்றும் முழுமையான கணக்கெடுப்பு ஆகிய வற்றுக்கான ஒரு மையப்படுத்தப் பட்ட டிஜிட்டல் அமைப்பான 'சாத்தி'யை (SATHI) அறிமுகப்படுத்தியுள்ளது. வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தால் தேசிய தகவல் மையத்துடன் (NIC) இணைந்து உருவாக்கப்பட்ட இந்த 'சாத்தி' இணையதளம், இந்திய வேளாண் சூழல் அமைப்பு முழுவதும் விதைகளின் தரம், வெளிப்படைத்தன்மை மற்றும் ஒழுங்கு முறை இணக்கத்தை உறுதி செய்வதில் ஒரு முக்கிய மைல்கல்லைக் குறிக்கிறது. இது குறித்து மயிலாடுதுறை மாவட்ட விதை சான்று மற்றும் உயிர்மச்சான்று துறை உதவி இயக்குனர் திருமதி. சே.விஜயா மற்றும் விதை சான்று அலுவலர் ச .கண்ணன் ஆகியோர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் விரிவாக கூறியுள்ளார்கள்

விதை என்பது அடிப்படை விவசாய இடுபொருளாகும், இது விவசாயிகளின் வருமானத்தை உறுதி செய்வதோடு மட்டுமல்லாமல் உணவுப் பாதுகாப்பையும் உறுதி செய்கிறது. கடந்த நாற்பது ஆண்டு களாக, தமிழ்நாடு அரசின் விதைச் சான்று மற்றும் அங்ககச்சான்று துறை அதன் பிரிவுகளான விதைச்சான்று, விதை தரக்கட்டுப்பாடு மற்றும் விதைப் பரி சோதனை ஆகியவை மூலம் தமிழக விவசாயிகளுக்கு தரமான விதைகள் அதன் தரம் குறையாமல் கிடைப்பதை உறுதி செய்வதற்காக நேர்த்தியாக செயல் பட்டு வருகிறது

உணவு தானிய உற்பத்தியை விடவும், அந்த உணவுப் பொருள்களின் உற்பத்திக்குத் தேவையான விதைகளை உற்பத்தி செய்தால் விவசாயிகளுக்குக் கூடுதல் லாபம் கிடைக்கும்.

தரமான விதைகள் இருந்தால் தான் உணவு தானிய உற்பத்தி அதிகரிக்கும். ஆகவே, விதைகளின் இனத்தூய்மை, முளைப்புத் திறன், ஈரப்பதம் உள்ளிட்ட பல்வேறு அம் சங்களை ஆராய்ந்து விவசாயிகள் உற்பத்தி செய்யும் விதைகள் தரமானவைதானா என்பதை உறுதி செய்து சான்றிதழ் அளிப்பதற் காகவே விதைச் சான்றளிப்புத் துறை என்ற தனித் துறை செயல்பட்டு வருகிறது.

விவசாயிகளுக்குத் தேவையான விதை கள் அனைத்தையும் வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் வேளாண்மைத் துறையால் மட்டுமே வழங்க முடியாது. ஆகவே, தனியார் நிறுவனங்களும், பிற விதை உற்பத்தி நிறுவனங்களும் விவசாயிகளுடன் இணைந்து விதை களை உற்பத்தி செய்து தருகின்றன.

விதை உற்பத்தி செய்ய விரும்பும் விவசாயிகள் அருகிலுள்ள விதை சான்றளிப்பு அலுவலகத்தை அணுகி தங்கள் விதைப் பண்ணை தொடர்பான விவரங்களை முதலில் பதிவு செய்து கொள்ள வேண்டும். அதன் பிறகு பயிர் பூக்கும் நிலை யிலும், அறுவடையின் போதும் விதைச் சான்றளிப்பு அலுவலர் நமது விதைப் பண்ணைக்கே நேரில் வந்து விதையின் இனத் தூய்மை குறித்து ஆய்வு செய்வார். அறுவடைக்குப் பின் விதை களின் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு உதவி வேளாண்மை இயக்குநர் அலுவலகத்துக்கு அனுப்பப்படும். அங்கு விதையின் முளைப்புத் திறன் உள்ளிட்ட விதையின் பல்வேறு தரங்கள் குறித்து பரிசோதனை நடத்தப்படும்.

இவ்வாறு விதையின் தரம் நிர்ணயிக் கப்பட்ட பிறகு அந்த விதைக்கு சான்றிதழ் அளிக்கப்படும். சான்றிதழ் அளிக்கப்பட்ட விதைகள் பின்னர் விற்பனைக்கு வரும்.

இவ்வாறு பல கட்ட தரக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்குப் பின்னர் சான்றிதழ் அளிக்கப்பட்டு விதைகள் விற்பனைக்கு வருவதால், விவசாயிகளுக்குத் தரமான விதைகள் கிடைப்பது உறுதி செய்யப் படுகிறது. மேலும் விதை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கும் உரிய லாபம் கிடைக்கிறது.

விவசாயிகள் தாங்களாகவே விதை உற்பத்தியாளராகி பயனடைவதுடன் பிற விவசாயிகளின் விதைத் தேவைகளையும் பூர்த்தி செய்யலாம்.

விதை சான்று பணிகளை மேற்கொள்ள, இந்திய அரசின் SATHI (Seed Traceability, Authentication and Holistic Inventory) Portal அல்லது தமிழ்நாடு அரசின் தமிழ்நாடு விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்றளிப்புத் துறை அதிகாரப்பூர்வ இணையதளத்தைப் பயன்படுத்தலாம்.

SATHI (விதை கண்டறியும் தன்மை, அங்கீகாரம் மற்றும் முழுமையான பட்டியல்) போர்டல் என்பது விதை உற்பத்தி, தரமான விதை அடையாளம்

காணல் மற்றும் விதை சான்றிதழ் ஆகியவற்றின் சவால்களைச் சமாளிக்க வடிவமைக்கப்பட்ட விதை கண்காணிப்பு, அங்கீகாரம் மற்றும் பட்டியல் ஆகியவற்றிற்கான ஒரு மையப்படுத்தப் பட்ட ஆன்லைன் அமைப்பாகும்.

இது இந்திய அரசின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் ஒரு முயற்சியாகும்.

SATHI–யின் முதற்கட்டம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. நரேந்திர சிங் தோமர் அவர்களால் ஏப்ரல் 19, 2023 அன்று அதிகாரப்பூர்வமாகத் தொடங்கி வைக்கப்பட்டது

இந்த போர்ட்டல்கள் மூலம் பின்வரும் முக்கிய சேவைகளை எளிதாகப் பெறலாம்:

விதை உற்பத்தியாளர் பதிவு: புதிய விதைப்பண்ணை மற்றும் விதை உற்பத்தி செய்யும் நிறுவனங்களை ஆன்லைனில் பதிவு செய்தல்.

### விதை சுத்திகரிப்பு நிலையங்கள்:

சுத்திகரிப்பு நிலையங்களை (Seed Process–ing Plants) பதிவு செய்தல் மற்றும் புதுப்பித்தல்.

விதை விற்பனை உரிமம்: புதிய விதை விற்பனை உரிமம் (Seed Dealership License) பெறுதல் மற்றும் உரிமத்தைப் புதுப்பித்தல்.

கள ஆய்வு அறிக்கை: விதைச் சான்று அலுவலர்களால் மேற்கொள் ளப்படும் கள ஆய்வுகளின் (Field Inspection Report) விவரங்களை பதிவிறக்கம் செய்தல்.

விதை சான்றிதழ் மற்றும் தரம்: விதைகளின் உண்மைத்தன்மை மற்றும் தரத்தை க்யூ.ஆர் (QR Code) குறியீடு மூலம் சரிபார்த்தல்.

SATHI, அதாவது விதை அங்கீகாரம், தடமறிதல் மற்றும் முழுமையான சரக்குப்பதிவு, ஒரு வளமான டிஜிட்டல் சூழலை உருவாக்க முயல்கிறது. இது விதை உற்பத்தியைக் கண்காணிப்பது, தரச் சான்றிதழை உறுதி செய்வது மற்றும் விநியோகத்தை மிகுந்த கவனத்துடன் நிர்வகிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. விதைகள் உருவா னதிலிருந்து அடுத்தடுத்த தலைமுறைகளாக விவசாயிகளின் கைகளுக்குச் சென்றடையும் வரை, அவற்றின் முழுமையான தடமறிதலை வழங்குவதே இதன் முக்கிய நோக்கமாகும். இது, விதைகளின் பயணத்தைக் கண்காணிப்பது மட்டுமல்லாமல், விவசாயிகளுக்கு அதிகாரம் அளிப்பதிலும் அவர்களின் விவசாய வளங்களின் நம்பகத்தன்மையை உறுதி செய்வதிலும் ஒவ்வொரு படியின் முக்கியத்துவத்தையும் அங்கீகரித்து, ஒரு முழுமையான அணுகுமுறையை வளர்க்கும் ஒரு அமைப்பைக் கற்பனை செய்கிறது.

விதைகள் வேளாண்மையின் அடிப்படை அலகுகளாகும்,அவை தாவர வளர்ச்சிக்கும் பயிர் உற்பத்திக்கும் தொடக்கப் புள்ளியாகச் செயல்படுகின்றன. விதைகளின் தரம் வேளாண் உற்பத்தித்திறனை கணிசமாகப் பாதிக்கிறது, எனவே வலுவான மற்றும் நிலையான விவசாய நடைமுறைகளை உறுதி செய்வதற்கு, அவற்றைக் கவனமாகத் தேர்ந்தெடுத்து நிர்வகிப்பது இன்றியமையாததாகும். விதை ஒழுங்குமுறைகளைச் செயல்படுத்துதல், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை ஊக்குவித்தல், மற்றும் விதைச் சான்றிதழ் திட்டங்களை எளிதாக்குதல் ஆகியவற்றின் மூலம் விவசாயிகளுக்குத் தரமான விதைகள் கிடைப்பதை உறுதி செய்வதில் அரசாங்கங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. விதை அங்கீகாரம், தடமறிதல் மற்றும் முழுமையான சரக்கு விவரப் பட்டியல் (SATHI) திட்டம், இங்கு கிடைக்கிறது.https://seedtrace.gov.inஉயர்தர விதைகளை உரிய நேரத்திலும் துல்லியமாகவும் விநியோகிப்பதை உறுதி

செய்வதிலும், சூழல் மண்டலத்திலிருந்து போலியான விதைகளை அகற்றுவதிலும் அரசுக்கு உதவுவதற்காக இது வடிவமைக் கப்பட்டுள்ளது.

SATHI ஒரு மல்டி டெனென்ட் பயன்பாடாக, எதிர்பார்ப்புகளுக்கு அப்பாற்பட்டுச் செயல்பட்டு, ஒரே ப்ராஜெக்ட் இன்ஸ்டன்ஸில் அனைத்து மாநிலங் களுக்கும் தடையின்றி சேவை செய்கிறது. இதன் குறிப்பிடத்தக்க உள்ளமைவுத் திறனே இதை உண்மையிலேயே தனித்துவமாக்குகிறது; இது ஒவ்வொரு மாநிலமும் அதன் அனுபவத்தைத் தனிப்பயனாக்க அனு மதிக்கிறது. மாநிலம் சார்ந்த பணிப்பாய்வுகள், தனித்துவமான சொற் களஞ்சியங்கள், தனிப் பயனாக்கப்பட்ட கட்டண வசூல் முறைகள் முதல் தரவு சேகரிப்பு மற்றும் சரிபார்ப்பு தர்க்கங்கள் வரை அனைத்தையும் ஒவ்வொரு மாநிலத்தின் தனிப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப எளிதாக உள்ள மைக்க முடியும்.

பல்வேறு துறைகளைச் சார்ந்த கவலை களைத் தணிப்பதும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடையே தர உறுதி நடவடிக் கைகளின் மீதான கவனத்தை உயர்த்து வதும் SATHI–யின் தொலைநோக்குப் பார்வையாகும். விதை உற்பத்தி மற்றும் சான்றளிப்பின் தலைமுறைகள் முழுவ தையும் நுணுக்கமாக இணைப்பதன் மூலம், SATHI விநியோகச் சங்கிலியை வலுப் படுத்தவும், ஒட்டுமொத்த தரத்தை மேம் படுத்தவும், விதைச் சங்கிலிக்குள் நடக்கும் எந்தவொரு ஏமாற்று நடைமுறைகளையும் தடுக்கவும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

SATHI சூழலமைப்பில் உள்ள முக்கியப் பங்குதாரர்களில் ICAR, பயிர்வளர்ப்பு விதை உற்பத்தி மையங்கள், மாநில விதைச் சான்றளிப்பு அமைப்புகள், மாநில விதைச் சோதனைக் கூடங்கள், மத்திய விதைச் சோதனைக் கூடம், விதை உற்பத்தி நிறுவனங்கள், விதை பதப்படுத்தும் ஆலைகள், விதை உற்பத்தியாளர்கள், விதை மொத்த விற்பனையாளர்கள், விதை சில்லறை விற்பனையாளர்கள், மாநில அரசுகள் மற்றும் இறுதியாக, விவசாயி போன்ற பல்வேறு அமைப்புகள் அடங்கும். இந்தச் சூழலமைப்பின் பரந்த இலக்குகளை அடைவதற்கு, இந்த அமைப்புகளுக்கு இடையேயான உத்திசார்ந்த ஈடுபாடும் நோக்கங்களைச் சீரமைப்பதும் மிக முக்கியமானவை.

இந்தத் திட்டத்தின் உருவாக்கம் 2 கட்டங்களைக் கொண்டுள்ளது. திட்டத் தின் முதல் கட்டம், கரு முதல் இனப்பெருக்கி வரையிலான விதை உற்பத்தி, இனப்பெருக்கி முதல் அடித்தளம் வரையிலான மற்றும் சான்றளிக்கப்பட்ட விதை உற்பத்தி செயல்முறைகளின் பணிப்பாய்வுத் தானியக்கத்தை உள்ளடக்கியது. திட்டத் தின் இரண்டாம் கட்டம், விதை விற்பனை யாளர் உரிமம், விதை விநியோகச் சங்கிலி மற்றும் இருப்பு மேலாண்மை ஆகிய வற்றை உள்ளடக்கும்.

SATHI முறையைச் செயல்படுத்துவதன் மூலம், விவசாயிகள் தாங்கள் வாங்கிய விதைப்பைகளுக்கான முழுமையான தடமறியும் வசதியைப் பெறுவதோடு, தங்கள் சுற்றுவட்டாரத்தில் விதைகள் கிடைப்பது குறித்த நிகழ்நேரத் தகவல் களையும் பெறுகிறார்கள். இந்த அமைப்பு, விநியோகச் சங்கிலியில் தரம் குறைந்த, போலியான அல்லது கள்ள விதைப்பைகள் ஊடுருவுவதைத் தடுக்கும் ஒரு வலுவான காரணியாகச் செயல்படுவதோடு, அங்கீகரிக் கப்பட்ட வழிகள் மூலம் பிரத்தியேகமாகப் பெறப்பட்ட QR குறியீடு கொண்ட விதைப்பைகளை விற்பனை செய்யவும் அனுமதிக்கிறது. விவசாயிகளுக்கு உண் மையான விதைகள் கிடைப்பதை உறுதி செய்வதே இதன் முதன்மை நோக்கமாகும். இது இறுதியில் விவசாய உற்பத்தியை


இயற்கையுடன் இணைந்து...
ஆரோக்கியமாக வாழ்வோம்...
100% NATURAL
NO PRESERVATIVES
NO CHEMICALS
IYARKAI VALAM
FOOD PRODUCTS
காய்கறி மற்றும் கீரைகள் சார்ந்த பொருட்கள்
காளான் சாதக் கலவை
காளான் அடைமாவு கலவை
காளான் சத்துமாவு கலவை
காளான் இட்லி பொடி
பீட்ரூட் உடனடி ஊட்டச்சத்து கலவை
கேரட் உடனடி ஊட்டச்சத்து கலவை
சோற்றுக்கற்றாழை உடனடி ஊட்டச்சத்து கலவை
முருங்கை கீரை பொடி, சாதப்பொடி, சூப் மிக்ஸ், ரசப்பொடி
செவ்வாழை உடனடி ஊட்டச்சத்து கலவை
காய்கறி மற்றும் கீரை வடகம்
தூதுவளை ரசப்பொடி
அருகம்புல் ரசப்பொடி
வல்லாரை கீரை உடனடி ஊட்டச்சத்து கலவை
பொன்னாங்கண்ணி கீரை உடனடி ஊட்டச்சத்து கலவை
முடக்கத்தான் கீரை சாதப்பொடி, சூப் பொடி மற்றும் ரசப்பொடி
தானியங்கள் (ம) தானியப் பொருட்கள்
பாரம்பரிய அரிசி வகைகள்
செறிவூட்டப்பட்ட சிறுதானியங்கள்
இரும்பு சத்து நிறைந்த உடனடி இணை ஊட்டச்சத்து கலவை
சிவப்பு அரிசி இடியாப்பம் மிக்ஸ்
வரகு புட்டு மிக்ஸ்
ராகி சப்பாத்தி மிக்ஸ்
ராகி புட்டு மிக்ஸ்
கவுனி அரிசி சேமியா
மாப்பிள்ளை சம்பா பஃப்ஸ்
மாப்பிள்ளை சம்பா குக்கீஸ்
சிறுதானிய முறுக்கு
சிறுதானிய அதிரசம்
சோள வடகம்
கம்பு வடகம்
ராகி வடகம்
பனங்கற்கண்டு
கம்பு தோசை மாவு
அரிசி வடகம்
ராகி நூடுல்ஸ்
பருப்பு வகை உணவுப்பொருட்கள்
கடலை மிட்டாய்
பருப்பு பொடி
பழத்தயாரிப்புகள்
உலர் திராட்சை
ஜெல்லி, ஜாம்
பால் சார்ந்த பொருட்கள்
வெண்ணெய்
பால்கோவா
எண்ணெய் வகைகள்
நல்லெண்ணெய்
தேங்காய் எண்ணெய்
கடலை எண்ணெய்
PURE by NATURE
MADE with CARE
IYARKAI VALAM
இயற்கை வளம்
8056395483
channelscan@gmail.com
https://www.facebook.com/share/1Hfqwh9eYL/
UDYAM REGISTRATION NUMBER
UDYAM-TN-12-0182750
SUPPORT LOCAL
THINK GLOBAL

அதிகரிக்கவும், விவசாயி களின் வருமானத்தை மேம்படுத்தவும் பங்களிக்கிறது.

## அம்சங்கள்

SATHI இணையதளம், விதைகளின் முழு வாழ்க்கைச் சுழற்சியையும் மேம்படுத்தவும் நெறிப்படுத்தவும் உதவும் பின்வரும் அம்சங்களை வழங்குகிறது:

முழுமையான தெரிவுநிலை மற்றும் தடமறிதல்: இந்த இணையதளம், விதைகள் உருவானதிலிருந்து அவற்றின் வாழ்க்கைச் சுழற்சியின் இறுதி வரை முழுமையான தெரிவுநிலையையும் தடமறியும் வசதியையும் வழங்குகிறது.

பின்னோக்கிய இணைப்பு மூலம் தடமறிதல்: இது பின்னோக்கிய இணைப்பு வழியாக விதை மூலங்கள், இரகங்கள் மற்றும் தரத்தை அடையாளம் காண உதவுகிறது, இதன் மூலம் அவற்றின் தோற்றத்தைக் கண்டறிய முடிகிறது.

இனப்பெருக்க விதை செயல் முறை களின் தானியக்கம்: இனப்பெருக்க விதைகளுக்கான கோரிக்கை சமர்ப்பிப்பு, ஒதுக்கீடு, பங்கீடு மற்றும் பெறுதல் போன்ற கைமுறை செயல்முறைகள் தானியக்க மாக்கப்பட்டு, செயல்திறன் உறுதி செய்யப்படுகிறது.

விதை தேவை மற்றும் விநியோகத்தை நிகழ்நேரத்தில் கண் காணித்தல்: இந்த இணையதளம், இனப்பெருக்க விதைக ளுக்கான தேவை, அவற்றின் ஒதுக்கீடு மற்றும் விநியோகச் சங்கிலி ஆகியவற்றை நிகழ்நேரத்தில் கண்காணித்து, சரியான நேரத்தில் பதிலளிப்பதை உறுதி செய்கிறது.

விதைச் சான்றளிப்பைத் தானியக் கமா க்குதல்: இது பதிவு செய்தல், ஆய்வு செய்தல், சோதித்தல் மற்றும் சான்றிதழ் களை வழங்குதல் ஆகியவற்றை உள்ளடக்கிய விதைச் சான்றளிப்பு முறையைத் தானியக்கமாக்கி, மனிதத் தலையீட்டைக் குறைக்கிறது.

குறைக்கப்பட்ட காகிதப்பணி மற்றும் மொபைல்/டேப்லெட் ஆய்வுச் செயலி: மொபைல்/டேப்லெட் செ யலியைப் பயன்படுத்துவதன் மூலம் காகிதப்பணி குறைக்கப்பட்டு, ஆய்வு செயல்முறைகள் மேலும் செயல்திறன் மிக்கதாகின்றன. இது எளிதான மற்றும் மிகவும் பயனுள்ள ஆய்வுகளைச் சாத்தி யமாக்குகிறது.

## தானியங்கு விதை விற்பனையாளர் செயல்முறைகள்:

இந்த இணையதளம் விதை விற்பனையாளர்களின் பதிவைத் தானியக்கமாக்குகிறது, விண்ணப்பப் புதுப்பித்தல் மற்றும் உரிமங்கள் வழங்குவதை எளிதாக்குகிறது, இதன் மூலம் நிர்வாக நடைமுறைகளைச் சீரமைக்கிறது.

டாஷ்போர்டு அடிப்படையிலான கண் காணிப்பு மற்றும் மேலாண்மைத் தகவல் அமைப்பு (MIS): ஒரு டாஷ்போர்டு, அனைத்து விதை வாழ்க்கைச் சுழற்சி நடவடிக்கைகளையும் மேற்பார்வையிட உதவும் விரிவான கண்காணிப்பு மற்றும் மேலாண்மைத் தகவல் அமைப்பு (MIS) திறன்களை வழங்குகிறது.

இருப்பு மற்றும் விற்பனைக் கண்காணிப்பு: இது விதை இருப்பைக் கண்காணிக்கவும், விவசாயிகளுக்கான விற்பனையைக் கண்காணிக்கவும் உதவுவதோடு, தேவை மற்றும் வழங்கலைச் சிறப்பாக நிர்வகிக் கவும் வழிவகுக்கிறது.

இதன்மூலம், இறுதியில் சம்பந்தப் பட்டவர்கள் மற்றும் விவசாயிகள் ஆகிய இருவருக்கும் இது பயனளிக்கிறது.

SATHI ஒரு வலுவான மைக்ரோசர்வீசஸ் கட்டமைப்பில் வடிவமைக்கப்பட்டுள்ளது, இது தடையற்ற செயல்பாட்டிற்காக மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் சுதந்திரமான கூறுகளை உறுதி செய்கிறது. கண் டெய்னர் அடிப்படையிலான வரிசைப்

படுத்தலைப் பயன்படுத்துவதன் மூலம், SATHI வெளிப்படுத்துகிறது

பல விதை தலைமுறைகளில் முழு மையான விதை வாழ்க்கைச் சுழற்சியை உள்ளடக்கிய ஒரு முழுமையான அணுகுமுறையை SATHI வழங்குகிறது. விதை உற்பத்தியில் இருந்து சான்றிதழ், உரிமம், விதை இருப்பு மற்றும் சான்றளிக்கப்பட்ட விற்பனையாளர்களால் விதை விவசாயிகளுக்கு விதை விற்பனை வரை முழு விதை விநியோகச் சங்கிலியையும் தானியக்கமாக்குவதன் மூலம் இந்த நடவடிக்கை அடையப்படுகிறது. மேலும் விதைகளைக் கண்டறியும் தன்மையும் இதில் அடங்கும்.

## முக்கிய அம்சங்கள்

- பாரத் வரைபட இடைமுகத்தை அடிப்படையாகக் கொண்ட GIS அறிக்கைகள்
- பணப்பை சேவையை வழங்குதல்
- ஆஃப்லைன் நட்பு மற்றும் சாதன–அஞ்ஞானவாத மொபைல் பயன்பாடு
- ஆய்வு செயல்முறையின் தர சரிபார்ப்பிற்கான தர ஆய்வு தொகுதி
- செயலாக்கப்பட்ட சரிபார்ப்புத் தரவில் கணினி உருவாக்கிய மாதிரிச் சீட்டு.
- விதை பரிசோதனை ஆய்வகத்திற்கு மாதிரிகளை ஆன்லைனில் அனுப்புதல்.
- டிஜிட்டல் டேக் பதிவேட்டின் அடிப்படையில் டேக் சான்றிதழை வழங்குதல்.

## வழங்கப்படும் சேவைகள்

1. விதை உற்பத்தி நிறுவனங்களின் பதிவு – பல்வேறு மாநிலங்களுக்கான விதைச் சான்றிதழ் நிறுவனங்களின் கீழ் விதை உற்பத்தி நிறுவனங்களின் பதிவுக்கு விண்ணப்பிக்கவும் அல்லது நிலையைச் சரிபார்க்கவும்.
2. விதை பதப்படுத்தும் நிலையங் களின் பதிவு – பல்வேறு மாநிலங்களுக்கான விதைச் சான்றிதழ் நிறுவனங்களின் கீழ் பதிவு செய்ய விண்ணப்பிக்கவும் அல்லது விதை பதப்படுத்தும் நிலையங்களின் நிலையைச் சரிபார்க்கவும்.
3. விதை டீலர்ஷிப் உரிமம் – எந்தவொரு வணிகப் பிரிவும் வெவ்வேறு மாநிலங்களுக்கான விதை டீலர்ஷிப் உரிமத்தை வழங்கும் அதிகாரிகளுக்கு விண்ணப்பிக்கலாம் அல்லது நிலையைச் சரிபார்க்கலாம்.
4. கள ஆய்வு அறிக்கையைப் பதிவிறக்கவும் – தர ஆய்வாளரால் பதிவேற்றப்பட்ட கள ஆய்வு அறிக்கையைப் பதிவிறக்கம் செய்யலாம்.
5. டிரேஸ் டேக் எண் – தரச் சான்றிதழைப் பயன்படுத்தி விதை மூலத்திலிருந்து இலக்கு வரை விரிவான விதைத் தகவலைக் கண்டறிய முடியும்.

SATHI போர்ட்டலை எவ்வாறு அணுகுவது SATHI போர்ட்டலைப் பார்வையிட, https://seedtrace.gov.in/ ஐப் பார்வையிடவும்.

வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தால் தொடங்கப்பட்ட SATHI இணையதளம், விதைகளின் தடமறிதல் மற்றும் தர உறுதிப்படுத்தலுக்கான இந்தியாவின் மையப்படுத்தப்பட்ட எண்ணிமமையமாகும். இது, கரு/இனப்பெருக்க நிலைகள் முதல் ஆதார விதைகள் வழியாக சான்றளிக்கப்பட்ட விதைகள் வரை, விதைகளின் முழுமையான பயணத்தையும் நிர்வகித்து, விவசாயிகளுக்கு வெளிப்படைத் தன்மையையும் தரத்தையும் உறுதி செய்கிறது.

SATHI போர்ட்டலை யார் பயன்படுத்த வேண்டும்?

சமீபத்திய அரசாங்க அறிவிப்புகளின்படி, பின்வருபவர்களுக்கு இந்த இணையதளம் கட்டாயமாகும்:

- விதை உற்பத்தியாளர்கள்
- விதை சான்றிதழ் முகமைகள்
- விதை பரிசோதனை ஆய்வகங்கள்
- அரசுத் துறைகள்




கால் நடைகள் உழவனுக்கு உதவு பவை அவற்றை பேணிய போது நல்ல நிலையில் இருந்த விவசாயி இன்று கைவிட்டதால் தன் கையைச் சுட்ட கதைதான் மனமிருந்தால் உண்டு மார்க்கம். பசு மாட்டைக் கன்றுகளுடன் சேர்த்து வைத்து பால் கறந்து விற்க முடியாதவர்கள் வெறும் பசுங் கன்றுகளை மட்டும் வளர்க்கலாம். ஆடுகளில் என்றால் ஒரு 50 ஆட்டுக்குட்டிகளாவது வளர்க்கலாம்.இதற்குபெரிய அறிவு தேவையில்லை.பல இரகங்கள் உள்ளன என்பது சிலருக்கு தெரியாது வளர்ப் பவர்களிடம் கேட்க வெட்கப்படுவதும் தவறு.



வெள்ளாட்டு வகைகளில் உள் நாட்டினம் என்று நமது இந்திய அளவில் முக்கியமானவை. ஜமுனா பாரி, பீட்டல், மார்வாரி, கத்திய வாரி, பார்பாரி, தலைச்சேரி, சங்கம் நேரி, உஸ்மனா வாரி முதலியன தமிழ் நாட்டினங்களில் கன்னி ஆடு, சேலம் கருப்பு ஆடு, மோளை ஆடு, கொடி ஆடு என பல விதமான வகைகள் உள்ளது.

## நல்ல ஆடுகளைப் எப்படி பார்த்து வாங்குவது?

இந்தியாவின் மத்ய மற்றும் தென் மேற்குப் பகுதியில் பெராரி, சுந்தி மற்றும் டெக்கால் என்ற வகைகளும் உள்ளன. இமாசலப் பிரதேசத்தில் சம்பா, காடி, கஷ்மீரி, பாஷ்மினா வகைகள் காணப்படுகின்றன.

இராஜஸ்தானில் சிரோகி, ஆஹரானா வகைகள் உள்ளன. குஜராத்தில்குட்சி, தோகில வாடி, ஜால வாடி வகைகள் உள்ளன.

சில வெளிநாட்டு இனங்களைப் பயன்படுத்தி நமது நாட்டின் வெள்ளாட்டுப் பால் மற்றும் இறைச்சி உற்பத்தியைப் பெருக்கி வருகிறோம். ஆனால்




ஆல்ப்ஸ் மலைத்தொடரைச் சார்ந்த ஆல்பைன் இனம், எகிப்திய இன வெள்ளாடும் இந்திய ஜமுனா பாரியும் சேர்ந்து கலந்து உருவாக்கிய நூபியன் இனம் குறிப்பிடத்தக்கவை.

சுவிட்சர்லாந்து நாட்டை சார்ந்த சானன் இனம், டோகன்பெர்க் இனம், துருக்கி நாட்டை சார்ந்த அங்கோரா இனம் மற்றும் தென் ஆப்பிரிக்காவைச் சார்ந்த மோயர் இனம் கிடாக்கள் 100 கிலோ எடையும் பெட்டை ஆடுகள் 60 – 70 கிலோ எடையும் உள்ளவை. நல்ல ஆடுகளைப் பார்த்து வாங்குவது எளிது. பராமரிப்புக்கு கால்நடை மருத்துவ ஆலோசனை பெற்றால் போதும். மிக எளிதில் எத்தனை ஆடுகள் வேண்டுமானாலும் வளர்க்கலாம் அதற்குரிய நல்ல தீவன சாகுபடியும் தேவை. இரண்டு பல் உள்ளதாக ஒரு ஈற்றில் 2 அல்லது 3 குட்டி போடும், மிருதுவான பளபளப்பான தோல் கொண்டதாக சுறுசுறுப்புடன், முதுகுப்புறமும் பின் பகுதியும் அகன்று விரிந்ததாக, தாய்மை குணம் நிரம்பிய பெட்டை ஆடாக, ஆரோக்கியமான, நன்கு வளர்ச்சி அடைந்த ஆடே அற்புத லாபம் தரும்.

**மேலும் விபரங்களுக்கு 98420 07125**



## ஏன் முருங்கை?

- புரதம், இரும்புசத்து, கால்சியம், வைட்டமின் A, C நிறைந்தது
- நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்
- இரத்த சோகையைத் தடுக்க உதவும்
- எலும்பு மற்றும் கண் ஆரோக்கியத்தை மேம்படுத்தும்
- சர்க்கரை, கொழுப்பு, மலச்சிக்கல் போன்றவற்றைக் கட்டுப்படுத்த உதவும்
- இயற்கை மருத்துவ குணங்கள் கொண்டது

## தொழில் வாய்ப்பு

- ✔ வீட்டுத் தொழிலாக தொடங்கலாம்
- ✔ மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ஏற்றது
- ✔ குறைந்த முதலீட்டில் அதிக வருமானம்
- ✔ உள்ளூர் மற்றும் ஆன்லைன் சந்தைப்படுத்தல் வாய்ப்பு



> “ தினமும் முருங்கை
> வாழ்நாள் முழுவதும் ஆரோக்கியம் ”

இயற்கை சத்து நிறைந்தது | எளிதில் கிடைக்கும் குறைந்த விலை | நீண்டகால சேமிப்பு சாத்தியமானது


## மதிப்புக்கூட்டப்பட்ட முருங்கை தயாரிப்புகள்

### 1. இட்லி – தோசைப் பொடி



- முருங்கை இலை இட்லி பொடி
- முருங்கை இலை தோசை பொடி
- சத்து நிறைந்த சுவையான பொடி

### 2. உடனடி உணவுகள்



முருங்கை இலை பிரட்



முருங்கை குக்கீஸ்



முருங்கை நூடுல்ஸ்



முருங்கை பாஸ்தா

சத்தானதும் சுவையானதும் – உடனடி பயன்பாட்டிற்கு ஏற்றது

### 3. ஊறுகாய் வகைகள்



முருங்கை இலை ஊறுகாய் | முருங்கைக்காய் ஊறுகாய்

சுவையும் சத்தும் நிறைந்த பாரம்பரிய உணவு

### 4. ஆரோக்கிய பானம்



**முருங்கை இலை டீ**

- நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்
- மனஅழுத்தத்தை குறைக்கும்
- உடலை புத்துணர்ச்சி பெறச் செய்யும்
- இயற்கையான மூலிகை பானம்

### 5. முருங்கை இலைப் பொடி – பல பயன்பாடுகள்



சூப் | சாம்பார் | சட்னி | பொடிகள் மற்றும் கலவைகள்

**100% இயற்கை**

செயற்கை நிறமிகள் இல்லை | பாதுகாப்பானது | ஆரோக்கியமானது

### முடிவுரை

முருங்கை கீரை மற்றும் பொடியில் அதிக சத்துகளும் மருத்துவப் பண்புகளையும் கொண்டிருப்பதனால், நம் அன்றாட உணவில் சேர்த்து பயன் பெறலாம். மேலும், இது எளிதில் கிடைக்கக் கூடியதோடு, விலையும் மலிவானதாக இருப்பதால், முருங்கையைப் பதப்படுத்தி, மதிப்புக்கூட்டப்பட்ட பொருள்களாக மாற்றி, சந்தைப்படுத்தலாம்.

MORINGA
NATURAL & HEALTHY

டி. யுவராஜ் தட்சிணாமூர்த்தி
வேளாண்மை பொறியாளர்
உடுமலைப்பேட்டை
தொடர்பு 94432 12345
மின்னஞ்சல்: yuvaraj.agri@gmail.com

SCAN ME



# மதிப்புக்கூட்டுப் பொருள்கள் விற்பனையில் சாதிக்கும் மீனவப் பெண்



மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்கள் என்பது இன்று எல்லா விளை பொருள்கள் மட்டு மல்லாமல், கடல்வாழ் உயிரினங்கள் மூலமும் பெறப்படுகின்றன. கடலை மட்டுமே நம்பியுள்ள மீனவர்களும், மீனவர்களின் குடும்பத்தினரும் கடலுக்குச் சென்று, கடல் வாழ் உயிரினங்களைப் பிடித்து, அதை கரைக்குக் கொண்டுவந்து மொத்த வியா பாரிகளிடம் கொடுத்து, பணம் பெற்று தங்கள் வாழ்வாதாரத்துக்கு வழி தேடு கின்றனர். இதுதான் காலங்காலமாக நடந்துவரும் செயல்.

ஆனால், ஒரு மீனவப் பெண் கடலில் இருந்து கிடைக்கும் பல்வேறு வகை மீன்கள், நண்டு உள்ளிட்ட உயிரி னங்களைப் பிடித்துவந்து, அவற்றை மதிப்புக் கூட்டப்பட்ட ஊறுகாய், சூப் பொடி உள்ளிட்ட பல்வேறு பதார்த்தங்களைத் தயாரித்து, அவற்றை பாக்கெட்டில் அடைத்து விற்பனை செய்து வருகிறார் என்றால், அது நம்மை பிரமிக்க வைக்கிறது. அந்த மீனவப் பெண் தொழில்முனைவோர் குறித்து சற்று விரிவாகப் பார்ப்போம்.

நாகை மாவட்டம், அக்கரைப்பேட்டை அருகே திடீர்குப்பம். இது ஒரு கடலோர கிராமம். இங்கு வசிப்பவர் மா.தமிழரசி. இவருக்கு வயது 49. எட்டாம் வகை வரை மட்டுமே படித்துள்ளார். கடந்த 4 நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் இவர் ஒரு குடும்பத் தலைவி. கணவர் கொண்டுவந்து கொடுக்கும் பணத்தைக் கொண்டு குடும்பத்தை நடத்தும் பொறுப்பை மட்டுமே பார்த்து வந்தார்.

2024. ஆண்டு. கிரிஷ் விஞ்ஞான் கேந்திரா (வேளாண் அறிவியல் நிலையம்) எனப்படும் வேளாண் விரிவாக்க மையத்தின் மூலம் பயிற்சி ஒன்றை சிக்கல் பகுதியில் நடத்தினர். முக்கியமாக, கடல்வாழ் உயிரினங்களைப் பயன்படுத்தி, மதிப்புக்கூட்டப்பட்ட பொருள்களைத்




தயாரித்து, பொருளாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பான பயிற்சி இது. இறால் ஊறுகாய், மீன் ஊறுகாய் குறித்து முதலில் பயிற்சி அளிக்கப்பட்டது. அக்கரைப்பேட்டையைச் சேர்ந்த சுய உதவிக் குழுவில் இணைந்து தமிழரசியும் இந்த பயிற்சி முகாமில் கலந்து கொண்டுள்ளார்.

வேளாண் அலுவலர் திரு.மதிவாணன் தொழில் தொடங்குவது தொடர்பான பயிற்சி மற்றும் பல்வேறு ஆலோசனைகளையும் வழங்கியுள்ளார். தொழில் தொடங்க கடன் பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து தருவதாகவும் அவர் கூறியுள்ளார். 'நம்மால் தொழில் செய்ய முடியுமா?' என்ற தயக்கத்தில் இருந்த தமிழரசியின் வீட்டுக்கே வந்து அவரை ஊக்கப்படுத்தியுள்ளார் திரு. மதிவாணன். மேலும், வேளாண் அலுவலர்கள் பலரும் அவரது ஆர்வத்தைத் தூண்டினர்.

ஒருமுறை கள்ளக்குறிச்சியில் புத்தகக் கண்காட்சி ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. வேளாண் துறை சார்பில் இந்த புத்தகக் கண்காட்சியில் ஸ்டால் அமைக்கலாம் என சுற்றறிக்கை அனுப்பப்பட்டது. மதிவாணன் சார் என்னை அந்த கண்காட்சியில் பங்கேற்று, மீன் பதார்த்தங்கள் கொண்ட ஸ்டால் ஒன்றை அமைக்குமாறு கேட்டுக் கொண்டார் என்கிறார் தமிழரசி.

இதற்குமுன், இதுபோன்ற கண்காட்சிகளில் ஸ்டால் அமைத்து, பழக்கமில்லை என்பதால் எனக்கு சற்று தயக்கம் ஏற்பட்டது. இருந்தாலும், கலந்து கொள்ளலாம் என முடிவு செய்தேன். கண்காட்சிக்கு 4 நாள்களுக்கு முன்னர்தான், இதுகுறித்த தகவல் வந்தது. அந்தச் சமயத்தில் இறால் மீனின் வரத்து குறைவாக இருந்தது. ஆனால், பூலிவிரால் மீனைக் கொண்டு ஊறுகாய் தயாரித்தோம். அதிக அளவாக 18 கிலோகிராம் வரை ஊறுகாய் தயாரித்தோம். அவற்றை நாகை சீ புட் என்ற பெயரில் 100 கிராம் என்ற அளவில் சிப்பமிட்டு, 180 பாக்கெட்டுகள் தயார் செய்தோம். அதுபோல, 30 கிலோகிராம் அளவுள்ள கருவாட்டையும் சிப்பமிட்டு, எடுத்துச் சென்றோம். அதாவது, விற்பனைக்காக ரூ.40,000 மதிப்புள்ள பதார்த்தங்களைக் கொண்டு சென்றோம். புத்தகக் கண்காட்சி 9 நாள்கள் நடைபெற்றது. ஆனால், எங்களது தயாரிப்புகள் 4 நாள்களிலேயே விற்பனையாகி விட்டன என்கிறார் தமிழரசி.

கள்ளக்குறிச்சி கண்காட்சியில் கலந்து கொண்டது எனக்கு உத்வேகத்தை அளித்தது. வெளி உலகம் தெரிய ஆரம்பித்தது. உற்பத்தியை அதிகரிக்கத் திட்டமிட்டோம். மேலும், கோவையில் கொடிசியா வில் நடைபெற்ற பயிற்சி வகுப்பு களிலும் கலந்து கொண்டேன். அதன்பிறகு பல்வேறு துறையினரும் எங்க ளைத் தேடி வந்தனர். தற்போது தமிழகத்தில் ராமநாதபுரம், தூத் துக்குடி, தேனி, தென்காசி உள்ளிட்ட 9 மாவட்டங்

களுக்கு எங்களது தயாரிப்புகளை அனுப்பி வருகிறோம்.

முதலில், கேவிகே மூலம் ரூ.2 லட்சம் கடன் பெற்றேன். அதில் பாதிக்கும் மேற்பட்ட கடனைச் செலுத்தி விட்டேன். அதன்பிறகு, இத் தொழிலில் மேலும் ரூ.3 லட்சம் முதலீடு செய்தேன். 2024-ல் இத் தொழில் தொடங்க முயற்சி மேற் கொண்டாலும், வேகமெடுத்தது என்னவோ, கடந்த ஓராண்டாகத் தான். சென்னையில் நடைபெற்ற உணவுத் திருவிழாவிலும் கலந்து கொண்டு, ஸ்டால் அமைத்து புதுப்புது பதார்த்தங்களைத் தயாரித்து, பொது மக்களின் பாராட்டைப் பெற்றோம்.

எங்களது தயாரிப்புகள் இயற்கை முறையில் தயாரிக்கப்படுகின்றன. எந்த விதமான வேதிப் பொருள் களையும் சேர்ப்பதில்லை. மீன் சூப் பொடி, வஞ்சரம் மீன் ஊறுகாய், இறால் பொடி, நெத்திலி ஊறுகாய், வாளை உலர் மீன் பொடி, திருக்கை மீன் உலர்பொடி-திருக்கை மீன் தொக்கு, இறால் ஊறுகாய், சூரை மாசி கருவாட்டுப் பொடி, நண்டு சூப் பொடி, நெத்திலி உலர் மீன் பொடி, பாறை உலர் மீன் பொடி, கணவாய் உலர் பொடி, வஞ்சிரம் உலர் மீன் பொடி, பால் சுறா மீன் தொக்கு உள்ளிட்டவற்றை தயாரித்து, விற்பனை செய்கிறோம். நியா யமான விலைக்கே விற்கிறோம்.

எங்களது நிறுவனத்தில் 10 பேர் பணி புரிகின்றனர். உறவினர்கள் சிலரும் உதவியாக இருக்கின்றனர்.




தயாரிப்புகளை மொத்தமாக வாடிக்கையாளர்களுக்கு அளிக்கிறோம். அவர்கள் அதை தனித் தனியாக பாட்டில்களில் அடைத்து, எங்களது லேபிளை ஒட்டி விற்பனை செய்யுமாறு கோருகிறோம். இத் தொழிலை மேலும் விரிவுபடுத்தும் திட்டங்களும் உள்ளன. விரைவில் சாதிப்போம் என்று கூறி முடித்துக் கொண்டார் தமிழரசி.;

தொடர்புக்கு - **தமிழரசி** 86828 67880, 99629 83527

# கடல் மீன்வள ஆராய்ச்சியில் ICAR பங்களிப்பு...

இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தின் (ICAR) கடல் மீன்வள ஆராய்ச்சி நிறுவனங்கள் (CMFRI) கடலோரப் பகுதிகளில் மீன் உற்பத்தி, மீன்வளர்ப்பு (Mariculture), மற்றும் நவீன வர்த்தக உத்திகள் மூலம் பல புதிய சாதனைகளை நிகழ்த்தி வருகின்றன

## ICAR–ன் முக்கிய சாதனைகள் மற்றும் திட்டங்கள்

### மீன்வள உற்பத்தியில் சாதனை:





ICAR–CMFRI மற்றும் பிற அமைப்புகளின் தொடர்ச்சியான ஆராய்ச்சி மற்றும் வழிகாட்டுதலால் இந்தியாவின் கடல் மீன் உற்பத்தி தொடர்ச்சியாக வளர்ச்சி அடைந்து வருகிறது.

### கூண்டு வளர்ப்பு முறை (Cage Culture):

கடலில் கூண்டுகளை அமைத்து மீன்களை வளர்க்கும் அதிநவீன தொழில் நுட்பத்தை ICAR அறிமுகப்படுத்தி யுள்ளது. இதன் மூலம் மீனவர்கள் மற்றும் தொழில் முனைவோர்கள் வணிக ரீதியாக அதிக லாபம் ஈட்ட முடிகிறது.

### அலங்கார மீன் வளர்ப்பு (Ornamental Fish Farming):

கிராமப்புற மற்றும் கடலோர மக்களின் பொருளாதாரத்தை உயர்த்த, அலங்கார மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்யும் நிலையங்கள் மற்றும் நெட்வொர்க் திட்டங்கள் வெற்றிகரமாக செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

### மீன் பதப்படுத்துதல் (CIFT):

ICAR–CIFT அமைப்பு, மீன் கெட்டுப் போகாமல் இருக்கவும், மதிப்பு கூட்டப்பட்ட மீன் தயாரிப்புகளை உருவாக்கவும் (Value–added products) புதிய தொழில்நுட்பங்களை வழங்கி வருகிறது.

கட்டுரைத் தொகுப்பு

வீரபாண்டி

**கே எஸ் பழனிசாமி**
மாநிலத் திட்ட பொறுப்பாளர்
இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம்
பாஜக விவசாய அணி
(95433–73204)

# பயிர் பாதுகாப்பில் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளும் பயன்பாடும்

உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் என்பது ரசாயனப் பூச்சிக்கொல்லிகளுக்குப் பதிலாக, இயற்கையான உயிரினங்கள் மற்றும் நுண்ணுயிரிகளைப் பயன்படுத்தி பயிர்களைத் தாக்கும் பூச்சிகள், நோய்கள் மற்றும் களைகளைக் கட்டுப்படுத்துவதாகும். இது சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பில்லாத, நிலையான வேளாண்மை முறைக்கு உதவுகிறது. உழுதல், உரமிடுதல், மருந்து தெளித்தல், களையெடுத்தல் என பயிர் பாதுகாப்புக்காக நாம் எடுக்கும் முயற்சிகள் போலவே, சில பூச்சி இனங்களும் சில நுண்ணுயிரிகளும் வேளாண்மைக்கு இயற்கையாக நன்மை செய்கின்றன. அத்தகைய பூச்சியினங்கள் எவை? நுண்ணுயிரிகள் எவை? எந்த வகையில் அவை விவசாயத்துக்கு நன்மை பயக்கின்றன என்பதை அறிந்து கொள்ள வேண்டும். பூச்சிகளின் உலகம் பிரமாண்டமானது. ஒவ்வொரு பூச்சிக்கும் தனித்தன்மை உண்டு. பூச்சிகளை அறிவியல் பார்வையுடன் காணும்போது, அதன் சூழல் பங்களிப்பு முக்கியத்துவம் புரியும். தீமை செய்யும் பூச்சிகளை மட்டும் பார்த்துப் பழகிய நாம், நன்மை செய்யும் பூச்சிகளை பற்றி அவசியம் அறிந்து கொள்ள வேண்டும்.

## விவசாயத்துக்கு உதவும் நன்மை செய்யும் பூச்சியினங்கள்

விவசாயத்திற்கு நன்மை செய்யும் பூச்சிகள், மகரந்தச் சேர்க்கை மற்றும் இயற்கையான பூச்சிக் கட்டுப்பாடு ஆகிய முக்கியப் பணிகளைச் செய்கின்றன. அவை பயிர்களைத் தாக்கும் தீமை செய்யும் பூச்சிகளை உணவாக உட்கொண்டு, இயற்கைச் சமநிலையைப் பேண உதவுகின்றன. "பூச்சி மேலாண்மையில், தீமை செய்யும் பூச்சிகள், நன்மை செய்யும் பூச்சிகளின் பொதுவான எண்ணிக்கை விகிதம் 2:1 கடைப்பிடிக்கப்படுகிறது. தீமை செய்யும் பூச்சிகள் நன்மை செய்யும் பூச்சிகளின் எண்ணிக்கை விகிதம் 2:1 என்ற அளவில் இருந்தால் மருந்து தெளிக்கும் முறைகள் தேவை இல்லை. விகிதம் 2:1–ஐ விட குறைவாக இருந்தால் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை கடைபிடிக்க வேண்டும். பறவைத்தாங்கி குச்சிகள், ஒட்டுண்ணி அட்டைகள், இனக்கவர்ச்சி பொறிகள், விளக்குப் பொறிகள், மஞ்சள் நிற ஒட்டு பொறிகள், வரப்பு பயிர் முறைகளை கடைபிடித்து நன்மை– தீமை செய்யும் பூச்சிகள் கண்காணிப்பு செய்து நல்ல விளைச்சல் பெற்றிடலாம். விவசாயத்தில், தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை வேட்டையாட ஒட்டுண்ணிகள், ஊண் விழுங்கிகள் என நன்மை செய்யும் பூச்சிகள் இரண்டு வகைகள் உள்ளன."

## ஒட்டுண்ணிபூச்சிகள்



தீங்கு விளைவிக்கும் பூச்சிகளின் முட்டைகள், புழுக்கள் அல்லது கூண்டுப் புழுக்களின் மீது வாழும் சிறிய பூச்சிகள் ஒட்டுண்ணிகள் என்று அழைக்கிறோம். பூச்சி ஒட்டுண்ணிகளை ஆங்கிலத்தில் 'பாரசிட் டாய்ட்ஸ்' என்று அழைக்கிறோம். பயிர்களைத் தாக்கும் முக்கிய பூச்சிகளை கட்டுப்படுத்த நன்மை செய்யும் பூச்சி ஒட்டுண் ணிகள் பயன்படுகின்றன. இந்த ஒட்டுண்ணிகள் தீங்கு செய்யும் பூச்சிகளின் முட்டை, புழு, கூண்டுப் புழு, வளர்ந்த பூச்சி நிலைகளை தேடி அவற்றில் தன் முட்டை யினை வைத்து பின்பு அழிப்பதால் இவை ஒட்டுண்ணிகள் வகைகளை சார்ந்தது. ஒட்டுண் ணிகள் 'ஹைமினோப்டரா' மற்றும்




'டிப்டரா' என்ற இரண்டு பூச்சி வகைகளில் 80 சதவீதம் காணப்படுகின்றன. ஹைமினோப்டிரா வகை ஒட்டுண்ணிகளை 'குளவி' இன ஒட்டுண்ணிகள் என்றும், டிப்டரா வகை ஒட்டுண்ணிகளை 'ஈ'க்கள் இன ஒட்டுண் ணிகள் என்றும் வகைப்படுத்தலாம்.

'குளவி' இன தாய் ஒட்டுண்ணிகள் வயிற்றின் பின்புற நுனிப்பகுதியில் ஊசி போன்ற முட்டை இடும் உறுப்பை கொண்டது. ஆனால் 'ஈ'க்கள் வகை ஒட்டுண்ணிகளுக்கு வயிற்றின் பின்புற நுனிபாகத்தில் ஊசி போன்ற முட்டை இடும் உறுப்பு கிடையாது. பொதுவாக பூச்சி ஒட்டுண்ணி குடும்பங்களில் டிரைகோ கிரம்மாட்டிடே, இக்னிமோனிடே, பிரக்கோ னிடே, பெத்திலிடே, என்சிர்டிடே ஆகியவை குளவி ஒட்டுண்ணிகளாகும். சிர்பிடே, டாக்கினிடே போன்றவை 'ஈ'க்கள் வகை ஒட்டுண்ணிகள். ஒட்டுண்ணி வகைகளில் இவை அனைத்தும் முக்கியமானவை.

ஒட்டுண்ணிகள் தீங்கு விளைவிக்கும் பூச்சிகளின் உடலின் உள்பகுதியிலோ அல்லது வெளிப்பகுதியிலோ முட்டையிடும். பூச்சிகளின் உடலின் உள்பகுதியில் முட்டையிடும் ஒட்டுண்ணி முட்டைகள் புழுக்களாக வெளி வந்து பூச்சிகளின் சத்துக்களை உட்கொண்டு அவற்றை அழித்து தன் இனத்தை பெருக்கு கின்றன. இவ்வாறு பூச்சிகளின் உடலின் உள்பகுதியில் தன் வாழ்கையை முடிக்கும் ஒட்டுண்ணிகளை உட்புற ஒட்டுண்ணிகள் என்றும், பூச்சிகளின் உடலில் வெளிப்பகுதியில் முட்டையிட்டு பூச்சிகளின் உடல் சத்தினை உறிஞ்சி பூச்சியை அழிக்கும் ஒட்டுண்ணிகள் வெளிப்புற ஒட்டுண்ணிகள் என்றும் அழைக்கிறோம்.

முட்டை பருவ ஒட்டுண்ணிகள் டிரைக்கோ கிரம்மா, டெலினோமஸ், டெட்ராஸ்டிக்கஸ் இவை மூன்றும் ஆகும். அதுபோல் முட்டை புழுப்பருவ ஒட்டுண்ணிகள் பிரக்கோனிட், பெத்திலிட், சால்சிட், இக்னுமானிட், எலா ஸ்மிட், டாக்கினிட் ஆகியவை ஆகும். இதுவே கூட்டுப்புழுப் பருவ ஒட்டுண்ணிகள், சால்சிட், ஈலோபிட், வண்ணத்துப்பூச்சி உள்ளிட்டவை. புழுப்பருவ ஒட்டுண்ணி எப்ரிகார்னியா ஆகும்.

## ஊண் விழுங்கிபூச்சிகள் பூச்சி

ஊண் விழுங்கிகளை 'பிரிடேட்டார்ஸ்' என்று அழைக்கிறோம். ஊண் விழுங்கிகளை

இரை விழுங்கிகள் என்றும் கூறலாம். இவற்றினை பூச்சியின ஊண் விழுங்கிகள் என்றும் பூச்சியினத்தை சேராத இதர ஊண் விழுங்கிகள் என்றும் இரண்டு வகையாக பிரிக்கலாம். உதாரணமாக சிலந்திகள், பறவைகள் போன்றவை இதர ஊண் விழுங்கிகளாகும். ஊண் விழுங்கிகள் இரையினை பிடித்து அழிப்பதற்கு ஏற்றவாறு உடலில் சில சிறப்பு அமைப்புகளையும், குணங்களையும் பெற்று உள்ளன. நீளமான கால்களில் முட்கள் போன்ற அமைப்பு, எல்லா திசைகளிலும் சுழற்றி பார்ப்பதற்கேற்றவாறு தலைகழுத்து இணைப்பு, பெரிய கண்கள், மென்று திண்பதற்கேற்ற உறுதி வாய்ந்த தாடைகள், இரையினை அறிந்து கொள்ள உணர்வு கொம்புகள், மறைந்திருந்து தாக்குவதற்கேற்ற நிறமாற்றம் மற்றும் உருவ அமைப்பு, இரையினை செயல் இழக்க செய்வதற்கான சுரப்பிகள், ஊசி போன்ற வாய்ப்பகுதிகள். இந்த உறுப்புகளும், உறுப்பு களும், உடல் அமைப்பும் இரை விழுங்கி களுக்கு பெரிதும் உதவுகிறது.




உலகில் மொத்தம் 220 வகை ஊண் விழுங்கி பூச்சி யினங்கள் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. பொதுவாக, பொறி வண்டுகள், நாவாய்ப் பூச்சிகள், பச்சைக் கண்ணாடி, இறக்கைப் பூச்சிகள், தட்டான் இனங்கள், தொழு பூச்சிகள், கிரிப்டோலிமஸ், கைலோமெனஸ், புருமஸ், ஸ்கிம்னஸ், கைலோகோரஸ், கிரைசோபர்லா, ஜாஸ்டீரோவி, சிரீபஸ், பராகஸ், சிர்பிட் புழுக்கள், எறும்பு இனங்கள், ஈக்கோபில்லா, தரை வண்டுகள், பரினா, ஒபியோனியா, தட்டான், சிலந்திகள், கலோசோமா, சிசிண்டெலா, மெகாசெபலா, டெரோஸ்டிகஸ், சிரடோர்ன்ஸ், பியூல்வ்ஸ், சிர்டோரினஸ், லிவிடி பென்னிஸ், மேக்ரோ லோபஸ், பிக்மேயஸ், நீர்த்தாண்டி, ரெடுவிட், மிரிட், ஆந்தோ கோரிட், ஏழு புள்ளி பொறி வண்டு, கிரைசோபர்லா கார்னியா, ஊசித் தட்டான், நீர் மிதப்போன், மாண்டிஸ் கும்பிடுப் பூச்சி, பாராடோசா, ஆக்சியோபஸ், டெட்ராகினாத்தா போன்றவற்றை எளிதாக பார்க்க முடியும். இவற்றில் வண்டுகள், நாவாய் பூச்சிகள், குளவிகள், கண்ணாடி இறக்கை பூச்சிகள் மிகவும் முக்கியமானதாகும்.

## ஊன் விழுங்கி பூச்சிகளை பாதுகாக்க வேண்டும்

ஊன் விழுங்கி பூச்சியினங்களில் பல வகை, இரையினை பிடித்து, கடித்து, குதறி மென்று உண்ணும் குணமுடையன. இவற்றிற்கு உதாரணமாக பொறிவண்டுகள், தட்டான், தொழுப்பூச்சி இவற்றைக்கூறலாம். இன்னும் சில வகை, இரையின் சாறை உறிஞ்சி சாப்பிடும் தன்மையுடையன. இவற்றிற்கு உதாரணமாக 'மிரிட்' மற்றும் 'ரெடுவிட்', நாவாய் பூச்சி யினங்களை கூறலாம்.

உலகம் முழுவதும் ஊன் விழுங்கி பூச்சிகள் உயிரியல் முறை பயிர்பாதுகாப்பில் சிறப்பாகச் செயல்படுகின்றன. பயிர்களைத் தாக்கும் பூச்சிகளை அழித்து நிலையாக வயல்களில் வாழ்வதால் பூச்சிகளின் எண்ணிக்கை மேலும் கட்டுப்படுத்தப்பட்டு பொருளாதார சேத நிலைக்கு குறைவாகவே வைக்கப்படுகின்றன. இவைகளை பெருக்கி வயல்களிலும், தோட்டங் களிலும் விடுவதாலும் இயற்கையிலேயே இருக்கும் ஊன் விழுங்கி பூச்சியை பாதுகாப்பதாலும் அவைகளை மேலும் மேலும் பெருக வாய்ப்பளிப்பதின் மூலமாகவும் நாம் நல்ல பலன்களை பெறமுடியும். பூச்சிக்கொல்லி மருந்துகளின் பயன்பாட்டினை குறைக்க முடியும். சுற்றுச்சூழலை பாதுகாக்க முடியும். மனிதர்கள், கால் நடைகள், மற்றும் பிற உயிர் இனங்களை காப்பாற்ற இயலும். ஆகவே ஊன் விழுங்கி பூச்சிகளை நாம் பாதுகாத்து அவற்றின் பலனை பயிர் பாதுகாப்பில் பெறவேண்டும்".

## டிரைக்கோகிரம்மா கைலோனிஸ்

இது நன்மை செய்யும் முட்டை ஒட்டுண்ணி. எப்ரிகார்னியா பூச்சி ஒட்டுண்ணி நெல்லில் இலைச்சுருட்டுப்புழு, கரும்பில் இடைக்கணு புழு, கத்திரி, வெண்டை, தக்காளி பயிர்களில் காய்ப்புழு, பருத்தியில் காய்ப்புழு தாக்குதலை கட்டுப்படுத்தும். நெல்லில் 37 வது நாளில் 7 நாட்கள் இடை வெளியில் 3 முறை முட்டை ஒட்டுண்ணி அட்டையை நூலில் கட்டி விட வேண்டும். கரும்பில் 120 வது நாளில் 15 நாட்கள் இடைவெளியில் 3 முறை கட்ட வேண்டும். கத்தரி, வெண்டை, தக்காளியில் 50 சதவீத பூப்பூக்கும் பருவத்தில் 10 நாட்கள் இடைவெளியில் 6 முறை கட்ட வேண்டும். பருத்தியில் 40 வது நாளில் 10 நாட்கள் இடைவெளியில் 3 முறை கட்ட வேண்டும். இவை கட்டும் போது ரசாயன உரம் தெளிக்கக்கூடாது. முட்டை ஒட்டுண்ணி வெயில் படும் போதுகுளவியாக பொரிந்து வெளிவரும். எனவே இவற்றை காலை, மாலை வேளையில் கட்ட வேண்டும். இவை தீங்கு செய்யும் எதிரி பூச்சிகளின் முட்டையின் மேல் முட்டையிட்டு அவற்றின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்தும். மழைக்காலத்தில் முட்டை ஒட்டுண்ணியை கட்டக்கூடாது. வரப்பிலிருந்து 2 அடி தள்ளி ஏற்ற இறக்க முறைப்படி 10 இடங்களில் கட்டி விடலாம்.



## விவசாயத்துக்கு உதவும் நன்மை செய்யும் பாக்டீரியாக்கள்

"விவசாயத்தில் 'பாக்டீரியா' நுண்ணுயிரி முக்கிய பங்கு வகிக்கிறது. தாவர வளர்ச்சி, மண் ஆரோக்கியம் மற்றும் நிலையான விவசாய நடைமுறைகளுக்கு அது உதவுகிறது. அதன்படி தாவர வளர்ச்சி ஊக்குவிப்பில் நைட்ரஜன் நிலைப்படுத்தலில் பாக்டீரியா செயலாற்றுவது குறிப்பிடத்தக்கது. 'ரைசோபியா', 'அசோடோபாக்டர்' மற்றும் 'அசோஸ்பைரில்லம்' போன்ற பாக்டீரியாக்கள் வளிமண்டல நைட்ரஜனை தாவரங்கள் பயன்படுத்தக்கூடிய வடிவமாக மாற்றுகின்றன. 'சூடோமோனாஸ்' மற்றும் 'பேசிலஸ்' போன்ற பாக்டீரியாக்கள் மண்ணில் இருக்கும் பாஸ்பரஸை கரைத்து, தாவரங்களுக்கு கிடைக்கச் செய்கிறது. 'அசோஸ்பைரில்லம்' மற்றும் 'சூடோமோனாஸ்' போன்ற பாக்டீரியாக்கள் 'ஆக்சின்கள்' மற்றும் 'சைட்டோகினின்கள்' போன்ற தாவர வளர்ச்சி சீராக்கிகளை உருவாக்குகின்றன.

'பேசிலஸ்' மற்றும் 'சூடோ மோனாஸ்' போன்ற பாக்டீரியாக்கள் எக்ஸோபோலி சாக்கரைடுகளை உற்பத்தி செய்கின்றன. அவை மண்ணின் அமைப்பு மற்றும் தண்ணீரைத் தாங்கும் திறனை மேம்படுத்துகின்றன. கரிமப் பொருட்களை சிதைத்து, தாவரங்கள் உறிஞ்சுவதற்கு ஊட்டச் சத்துக்களை வெளியிடுகின்றன. மேலும், பாக்டீரியாக்கள் பூச்சிக்கொல்லிகள் மற்றும் கன உலோகங்கள் போன்ற மாசுபடுத்திகளை சிதைக்கின்றன. 'சூடோ மோனாஸ்' மற்றும் 'பேசிலஸ்' போன்ற பாக்டீரியாக்கள் தாவரநோய் கிருமிகளைத் தடுக்கும் நுண்ணுயிர் எதிர்ப்பிகள் மற்றும் பிற சேர்மங்களை உருவாக்குகின்றன. விவசாயக் கழிவுகளை மேலாண்மை செய்யவும் பாக்டீரியாவை பயன்படுத்தலாம், சுற்றுச்சூழல் மாசுபாட்டைக் குறைக்கலாம்".

## சூடோமோனஸ் பாக்டீரியா

இது எதிர் உயிர் பாக்டீரியா . நெற்பயிரைத் தாக்கும் குலைநோய், இலைப் புள்ளி நோய், இலை உறை அழுகல் நோய், வாழையை தாக்கும் வாடல் நோய், பருத்தி, பயறு வகைகளை தாக்கும் வேரழுகல், தண்டழுகல், வாடல் நோய்களை கட்டுப்படுத்துகிறது. ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் வீதம் விதைப்பதற்கு 24 மணி நேரத்திற்கு முன்பாக விதைநேர்த்தி செய்ய வேண்டும். ஒரு எக்டேருக்கு 2.5 கிலோ வீதம் நெல் நாற்று வேர்களை நனைத்து நடவு செய்ய வேண்டும். ஒரு ஏக்கருக்கு ஒரு கிலோ வீதம் 50 கிலோ தொழு உரத்துடன் கலந்து வயலில் இடவேண்டும். ஒரு லிட்டர் தண்ணீரில் 2 கிராம் கலந்து 10 நாட்கள் இடைவெளியில் 3 முறை தெளித்து நோய் தாக்குதலை கட்டுப்படுத்தலாம்.

## பேசில்லஸ் பாக்டீரியா

இது எதிர் உயிர் பாக்டீரியா. இது மண் மற்றும் விதை மூலம் பரவும் நோய்களை தடுக்கும். இது தானியப் பயிர்களில் ஏற்படும் இலை கருகல் நோய், குலை நோய், இலைப் புள்ளி நோய், இலை உரை அழுகல் நோய், தண்டு அழுகல் நோய், வேர் அழுகல் நோய் வாடல் நோய் ஆகியவற்றை தடுக்கும். விதை நேர்த்தி செய்வதற்கு ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் வீதம் கலந்து 24 மணி நேரத்திற்கு பின் விதைக்க வேண்டும் . வயலில் இடுவதற்கு ஒரு ஏக்கருக்கு ஒரு கிலோ வீதம் 100 கிலோ மக்கிய தொழுஉரத்தோடு கலந்து நிலத்தில் ஈரப்பதம் இருக்கும் போது இட வேண்டும் . நாற்று நனைத்து நடுவதற்கு ஒரு ஏக்கருக்கு ஒரு கிலோ வீதம் நல்ல தண்ணீரில் கலந்து 30 நிமிடம் நாற்றினை நனைத்து பின் நடவு செய்ய வேண்டும் . பயிர்களில் தெளிப்பு செய்வதற்கு ஒரு லிட்டர் தண்ணீரில் 5 கிராம் அளவில் கலந்து தெளிக்கலாம்.

## விவசாயத்துக்கு உதவும் நன்மை செய்யும் பூஞ்சாணங்கள்

பூஞ்சாணங்கள் விவசாயத்தில் மிகச்சிறந்த நன்மைகளைச் செய்கின்றன. இவை மண்ணின் வளத்தை மேம்படுத்தி, தாவரங்களை நோய்களிலிருந்து காக்கின்றன.

## மைக் கோரைசா

மைக்கோரைசா தாவரங்களின் வேர்களுடன் இணைந்து கூட்டு வாழ்க்கை வாழ்கிறது. மண்ணில் இருக்கும் மணிச்சத்து மற்றும் பிற நுண்ணூட்டச் சத்துக்களை வேர்கள் எளிதாக உறிஞ்சுவதற்கு உதவுகிறது.

## டிரைக்கோடெர்மா விரிடி

இது நன்மை செய்யும் பூஞ்சாணம். செடிகளின் வேர்களைச் சுற்றி பூசண இழைகளால் பாதுகாப்பு வளையம் அமைத்து நோய்க்கிருமி தாக்காமல் பயிரை பாதுகாக்கிறது. பருத்தி, கம்பு, பயறு வகைகள், நிலக்கடலை, எள், சூரியகாந்தி, மஞ்சள், காய்கறி, பழப்பயிர்களை தாக்கும் வாடல், தண்டழுகல், வேரழுகல் நோய்களை கட்டுப் படுத்தும். தாவரங்களின் வளர்ச்சியைத் தூண்டி, விதைகளின் முளைப்புத் திறனை அதிகரிக் கிறது. ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் சேர்த்து 24 மணி நேரத்திற்கு பின் விதைக்க வேண்டும். ஒரு கிலோ விரிடியை 50 கிலோ தொழு உரத் துடன் கலந்து இட வேண்டும். கரணைக்கிழங்கு நேர்த்திக்கு 500 கிராம் விரிடியை 200 லிட்டர் தண்ணீரில் 5 முதல் 10 மணி நேரம் ஊறவைத்து நடவேண்டும். மெட்டாரைசியம் அனிசோபிலே இது நன்மை செய்யும் பூஞ்சாணம். மக்காச்சோள படைப்புழு, காண்டாமிருக வண்டு, கூன்வண்டு, அசுவினி, வெள்ளை ஈ, மாவுப்பூச்சி, இலைப் பேன், சிலந்திப்பேன், மலைப்பயிர், காய்கறி பயிர் களைத் தாக்கும் வேர்வண்டு புழுக்களை தாக்கி உடம்பில் ஒட்டிக்கொண்டு, அவற்றை நோயுறச் செய்து அழிக்கின்றன. ஒரு கிலோ பூஞ் சாணத்தை 100 கிலோ தொழு உரத்துடன் கலந்து வயலில் இடவேண்டும். ஒரு லிட்டர் தண்ணீரில் 8 கிராம் கலந்து தெளிக்கலாம். ஒரு எக்டேருக்கு 4 கிலோ பூஞ்சாணம் கலந்து பயன்படுத்தலாம். காண்டாமிருக வண்டுகளின் இளம்புழுக்களை கட்டுப்படுத்த 750 மில்லி தண்ணீரில் 250 கிராம் பூஞ்சாணம் கலந்து எருக்குழியில் தெளிக்க வேண்டும்.

## விவசாயத்தில் நன்மை செய்யும் என்.பி.வி வைரஸ்

நியூக்ளியோ போலி ஹெட்ரோவைரஸ் ( NPV )என்பது விவசாயத்தில் நச்சுத்தன்மையற்ற இயற்கை உயிரியல் பூச்சிக்கொல்லியாக செயல்படுகிறது. பயிர்களைச் சேதப்படுத்தும் குறிப்பிட்ட கம்பளிப்பூச்சிகளை மட்டுமே இது தாக்கி அழிக்கிறது. ஆனால் மனிதர்கள், பறவைகள் மற்றும் நன்மை செய்யும் பூச்சிகளுக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்து வதில்லை. சாகுபடி செய்கின்ற பயிர்களில் 30 முதல் 40 சதவீதம் புழுக்கள் வகை பூச்சிகளால் சேதாரம் ஏற்பட்டு விளைச்சல் பாதிக்கப்படுகிறது. புழுக்களை கட்டுப்படுத்த பெரும்பாலும் அனைத்து விவசாயிகளும் பூச்சிமருந்து கடை களில் ரசாயன மருந்துகளை மட்டுமே வாங்கி பயன்படுத்தி வருகின்றனர். இரசாயன மருந்திற்கு மாற்றாக இயற்கை வழியில் வைரஸ் நோய் தாக்கப்பட்ட புழுக்களில் இருந்து ஆய்வகத்தில் வைரஸ் காரணிகளை பிரித்து உற்பத்தி செய்யப்படுகிறது. இதனை பயிர்களில் தெளிக்கும் போது பயிர்களை உண்ணும் புழுக்கள் வைரஸ் நோய் தாக்கம் ஏற்பட்டு இறந்துவிடும்.

பொதுவாக ஒரு ஏக்கருக்கு 100 மில்லி என். பி.வி.வைரஸ் கரைசல் கிலோ நாட்டுச் சர்க்கரை, கலந்து மாலை வேலையில் தெளிக்க வேண்டும். தெளித்த வயலில் உள்ள புழுக்கள் உடனே சாகாது. இலைகளை உண்ணும் புழுக்களின் உடலுக்குள் வைரஸ் துகள்கள் செல்கின்றன. வைரஸ் தாக்கப்பட்ட புழுக்கள் 4 முதல் 7 நாட்களுக்குள் உண்பதை நிறுத்தி விட்டு, பயிரின் உச்சிக்குச் சென்று தலை கீழாகத் தொங்கி அழுகி இறந்துவிடும். இறந்த புழுக்களிலிருந்து வெளியேறும் வைரஸ் கள், காற்றின் மூலம் மற்ற புழுக்களுக்கும் பரவி அவற்றையும் அழிக்கின்றன.

தமிழ்நாடு அரசு வேளாண்மை துறை மூலம் உயிரியல் கட்டுப்பாட்டு முகவர்கள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதை அனைத்து பயிர்களுக்கும்

பயன்படுத்தலாம். இதனை பயன்படுத்துவது மிகவும் எளிது இதன் விளையும் குறைவு. பாக்டீரியா உயிரியல் மருந்துகள் ஒரு கிலோ 180 ரூபாய்க்கும் பூஞ்சான உயிர் மருந்துகள் ஒரு கிலோ 135 ரூபாய்க்கும் என்.பி.வி வைரஸ் நச்சுகிரி மருந்து ஒரு லிட்டருக்கு 850 ரூபாய்க்கும் முட்டை ஒட்டுண்ணி அட்டைகள் ஒரு சிசி அட்டை 40 ரூபாய்க்கும் வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

## பூச்சிகள் உருவத்தில் சிறிது, அதன் உலகம் பிரமாண்டமானது..

"உருவத்தில் சிறியதாகத் தெரியும் பூச்சிகளின் உலகம் மிகவும் பிரமாண்டமானது. பூச்சிகளும் மிகவும் அழகான உயிரினங்களே. ஒவ்வொரு பூச்சியிலும் ஒரு தனித் தன்மை திறன் இருக்கிறது. அவைகளிலும் பிரமிக்கத் தக்க வகையில் பல்வேறு வடிவங்கள் உருவ அமைப்புகள் வண்ணங்களில் அழகாக இப்பூமியில் பரிணமித்துள்ளன. இயற்கை அழகினை ரசிக்கும் நாம் இயற்கையோடு சார்ந்து வாழும் அனைத்து உயினங்களையும் பூச்சியினங்களையும் உற்று நோக்க வேண்டும். பூச்சிகள் என்றாலே நம்மில் பலருக்கும் பிடிக்காது. அது ஓர் அருவருக்கத்தக்க ஜீவன் என்றே எண்ணுகிறோம். ஆனால் அது தவறானது. மனிதர்களுக்கும் பூச்சிகளுக்கும் இடையேயான சார்பு வாழ்க்கை... தீமை செய்யும் பூச்சிகளை மட்டும் பார்த்துப் பழகிய நமது கண்களுக்கு நன்மை செய்யும் பூச்சிகள் தெரிவதே இல்லை. பூச்சியனங்களை உற்று நோக்கும் போது மிகவும் பிரமிப்பாகவும் அவற்றின் செயல்பாடுகளை கண்டு ரசிக்கும் போது இயற்கையின் படைப்பில் அனைத்தும் அதிசயங்களே என்ற ஓர் உள்ளுணர்வு மனதில் ஏற்படும். இப்பூமியில் பரிணமித்துள்ள உயிரினங்கள் அனைத்தும் உயிர்ச் சங்கிலி யின் பிணைப்பாகவே உள்ளது. பூச்சிகளையும், புழுக்களையும் அருவருப்புடன் பார்க்கும் சிந்தனை போக்கு அனைவரின் மனதிலும் படிந்துள்ளது. இந்த எண்ணம் மாற வேண்டும். பூச்சிகளை அறிவியல் பார்வையுடன் காணும்போது அதன் சூழல் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. பூச்சிகள் இயற்கைக்கு செய்யவேண்டிய பங்களிப்பை சரியாகவே செலுத்துகின்றன.

**மனிதர்களுக்கும் பூச்சிகளுக்கும் இடையேயான சார்பு வாழ்க்கை குறித்த விழிப்புணர்வு அனைவரின் மத்தியிலும் ஏற்பட வேண்டும். அதிகமான பூச்சிக்கொல்லி மருந்து பயன்பாட்டினால் பூச்சியினங்கள் பிற உயிரினங்கள் அழிவதை தடுக்க வேண்டும். இயற்கையோடு இயைந்த சாகுபடி முறைகளை கடைப்பிடித்து அதிக விளைச்சல் பெறுவதுடன் நஞ்சில்லா உணவை உட்கொள்ளவேண்டும். இதற்காக வயல் சூழல் ஆய்வு நடைமுறை தொடர்ந்து கடைப்பிடிப்பதை ஊக்குவிக்கும் பொருட்டு பண்ணைப்பள்ளி, வயல்வெளிப் பள்ளி பயிற்சி வகுப்புகள், ஏ.இ.எஸ்.ஏ. (AESA ) தொழில்நுட்பம் செயல் விளக்கங்கள், கருத் தரங்கு கண்காட்சிகள் ஏற்படுத்தி செயல் பட்டுவருகிறது. இதில் அனைத்து விவசாயி களும் ஆர்வத்துடன் கலந்து கொண்டு பயன்பெற வேண்டும்"**



தகவல்
**கா அரிபுத்திரன்**
எம். எஸ் சி. அக்ரி
வேளாண்மை அலுவலர் ,
உயிரியல் கட்டுப்பாட்டு
ஆய்வகம், விருதுநகர்
செல்பேசி 8248080922



வேளாண் வணிகம்
மாதம்
இருமுறை
வெளிவரும்
மின் நாளிதழ்
உங்கள் வணிகத்தை சந்தைப்படுத்தவும்,
உங்கள் தயாரிப்புகளை நேரடியாக
வாடிக்கையாளர்களிடம் கொண்டு சேர்க்கவும்
"வேளாண் வணிகம்" மின் நாளிதழ் வாயிலாக
மிகக் குறைந்த கட்டணத்தில்
விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்.
வேளாண் வணிகம்
விவசாயிகளின் முன்னேற்றமே
நமது இலக்கு
மாதம்
இருமுறை
வெளியீடு
"உங்களது விளம்பரம் – எங்கள் வளர்ச்சி பயணம்"
அதிக வாசகர்கள் செல்த்தும் நாளிதழ்
விவசாயிகள் மற்றும் வணிகர்கள் வணா நேரடி சென்றடையும்
உங்கள் வணிக வளர்ச்சிக்கு சிறந்த விளம்பர தளம்
மிகக் குறைந்த கட்டணத்தில் அதிக பலன்
நம்பகத்தன்மை மிக்க மற்றும் நிலையான சேவை
தொடர்புக்கு:
அழைக்கவும்
8056305483
நன்றி

# Green Park Smart School

## CBSE Senior Secondary School

### OUR FACILITIES

- GREEN CAMPUS
- SPORTS FACILITIES
- TRAINED FACULTIES
- INNOVATIVE TEACHING
- ROBOTICS, DRONE and AI
- LAB FACILITIES
- LIBRARY FACILITIES
- TRANSPORT FACILITIES

**ADMISSIONS OPEN NOW**

**REGISTER NOW**

www.greenparksmartschool.org

Scan, Apply and Get Hired !

737301 1522/33
73737 79762

SCAN ME

FOR ADDMISSION